# கவிக்கனவுகள்



அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முக[illegible]

சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

அன்பு நிலையம் இராமச்சந்திரபுரம்

பாமலர் ௬. அன்பு மலர் ௬௬.

# கவிக் கனவுகள்

அறிவு அபிவிருத்தி சங்கம் மதுரை.
P. குற்றாலம்
1-7-42.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அவ்வை தி. க. சண்முகம் நூலகம். தமிழியல்துறை.
184

☆

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றியது

☆

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா

உரிமை பதிப்புற்றது] 1941 [விலை { அணா 10 Cts. 50

# POETIC DREAMS

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1532
நன்கொடை எண்: 1532

*All Rights Reserved by*

THE ANBU NILAYAM
Ramachandrapuram :: Trichy Dt.

*First Edition : 2000 Copies*
*Price : Annas Ten*

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்), சென்னை.

# பதிப்புரை

எமது நிலயத்தின் முப்பத்தொன்பதாவது அன்பு மலரைக் (பாமலர் கூ) கலைவாணியின் திருவடியில் வைத்து வணங்குகிறோம். **கவிக் கனவுகள்** என்னும் இப்பாமலர்த் தொகுதி **சுவாமி சுத்தானந்த பாரதியார்** எழில் சிறந்த இயற்கையின்முன் தியானிக்கும்போது பாடியவையாம். இப்பாடல்களிற் பல சிதைந்து போயின; சில பத்திரிகைகளில் வந்தன; சில கடிதங்களில் கிடைத்தன. அனைத்துளும் நயமான **நாற்பத்தெட்டு பாடல்களை** எடுத்து தொகுத்துத் தமிழருக்கு அளிக்கிறோம். இப்பாடல்கள் இராக தாளங்களுடன் இனிது பாடத் தக்கவை. ஒவ்வொன்றிலும், கவிச்சுவை, கலைச்சுவை நிரம்பி யிருக்கின்றன. அவை மனித வாழ்வின் விமரிசனமாகவும் விளங்குகின்றன.

இந்த அரிய நூலைத் தம் அருமைத் திருமகன் திருவளர் **சாத்தப்பன்** புதுமை நன்னாளில் வெளியிட்டுதவிய அன்பர் **மகிபாலன்பட்டி சி. சுப. சுப்பிரமணியன் செட்டியார்** அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக! இந்த அன்பர் தமிழன்பும் பெருந்தகைமையும் பொதுநல ஆர்வமுங் கொண்டவர்.

பொது ஜனங்களுக்கு ஒரு விண்ணப்பம்: அடிகள் சிறுவயது முதல் கவி பாடி வந்திருக்கிறார்கள். அக்கவிகள் இடம் பொருள் ஏவலைப் பொறுத்துப் பல பான்மையாக அமைந்துள்ளன. **பாரத சக்தி** உயர்ந்த மஹா காவியம்; புலமை நிறைந்தது. **சக்திப் பாடல், பக்திப் பரவசம், பேரின்பம், அன்புறுதி**—இந்நான்கும் அடிகளின் யோக சாதனப் பாடல்கள். **சமயசாரம்** அடிகள் பல சமயங்களை அநுட்டித்ததன் பயனாக எழுந்தது. **குழந்தை யின்பம்** அடிகள் நாட்டுச் சிறுவர்மீது கொண்ட அன்பின் விளக்க

மாகும். **தமிழ்க்கனல்** அவர் உள்ளத்திற் கனலும் தமிழன்பிற் பொங்கிவந்து தமிழர்கூட்டத்தை முன்னேற்றும் ஆவேசப்பாடலாகும். **முன்னேற்றம்** நமது சமுதாயமும், உலக சமுதாயமும் ஒருகுலமாக வாழ வழிகாட்டும் அரிய பொதுநலப் பாடல்களாம். **கவிக் கனவுகள்** இயற்கையின் பத்தில் தோய்ந்தெழுந்த கலைப்பாடல்களாம். **எந்தாய்** உலகும் மனித சமுதாயமும் பாரதநாடும் இன்ப நிறைவு பெற அடிகள் பராசக்தியை வேண்டும் முறையீடுகளாகும். **திவ்விய ஜீவனம்** மனிதன் மாசற்ற அமர வாழ்க்கைக்கு உயர ஒரு ஆவேசக்கன லளிப்பதாகும். **யோகசித்தி** அடிகள் பல துறைகளிற் கண்ட உண்மை யனுபவங்களின் தொகுதியாகும். **இன்பமாலை** அடிகளின் ஆத்மானுபவ விளக்கமாகும். **காலத்தேர்** உலக வாழ்வை விளக்கும் அரிய நாடகமாகும். **அருட்பெரியார்** உலக தீர்க்கதரிசிகளின் வரலாறும் உபதேசங்களும் அடங்கியதாகும். இந்த மாதிரி ஒவ்வொரு நூலும் ஒரு குறித்த பொருளும் பயனும் கொண்டுள்ளது.

கவிக் கனவுகளுக்குப் படம் எழுதிய அன்பர் **R. T. கிருஷ்ணமூர்த்தி** பட்டம் பெற்ற புலவர்; கலா நிபுணர்; அவர் ஓவியக்கலையுடன் உருவச்சிலை வடிப்பதிலும், நாட்டியக் கலையிலும் புகழ்பெற்றவர்; **சித்திரமூர்த்தியைத்** தமிழர் ஆதரிக்க வேண்டும்.

இந்நூலைச் சொக்கழகாக அச்சிட்டுதவிய **சக்தி அச்சகத்திற்கு** எமது அன்பைத் தெரிவிக்கிறோம்.

இறைவனருள் எம்மை அன்புப் பணியில் ஊக்கி நடத்துக!

விஷு,
சித்திரை.

**அன்பு நிலயத்தார்**

தி. க. சண்முகம் நூல

# பொருளடக்கம்


| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| ௧. | இன்பக் கனவு | 3 |
| ௨. | கவலையை மறப்போம் | 4 |
| ௩. | அமுதம் | 7 |
| ௪. | இப்படி வாழவேண்டும் | 9 |
| ௫. | கலையெழுச்சி | 10 |
| ௬. | அவள் யார்? | 14 |
| ௭. | எனது காதலி | 15 |
| ௮. | கவியும், கனலும் | 18 |
| ௯. | காட்டு வனப்பினிலே | 21 |
| ௧௦. | என் ரோஜாம்பா! | 23 |
| ௧௧. | மின்னலுக்கு | 25 |
| ௧௨. | காலக் கடல்முன் | 27 |
| ௧௩. | கர்ச்சனை | 29 |
| ௧௪. | கதிரவன் சிரித்தான் | 31 |
| ௧௫. | அழகுத் தெய்வம் | 34 |
| ௧௬. | அழகுக்கலை | 35 |
| ௧௭. | தென்றலுடன் கொஞ்சுதல் | 36 |
| ௧௮. | வெள்ளித் திங்கள் | 38 |
| ௧௯. | நிலா விளையாட்டு | 40 |
| ௨௦. | புன்னகை வெள்ளம் | 43 |
| ௨௧. | வான் விளக்கம் | 44 |
| ௨௨. | குயிலும், கூண்டுக் கிளியும் | 47 |
| ௨௩. | பறவை இன்பம் | 51 |
| ௨௪. | கவிக் குருவி | 55 |

| | | |
|---|---|---|
| உரு. | அருவிப் பாட்டு | .... 57 |
| உசு. | அன்பே கடவுள் | .... 60 |
| உஎ. | எங்கும் அவன் | ... 62 |
| உஅ. | அறிவொளி | .... 64 |
| உகூ. | என் உறவும், பொருளும் | .... 67 |
| ௩௦. | யாத்திரை | .... 69 |
| ௩க. | கோனார் பாட்டு | .... 71 |
| ௩உ. | காலக் கன்னிகை | .... 73 |
| ௩௩. | காலப் பவனி | .... 75 |
| ௩ச. | கிழவன் கதை | .... 79 |
| ௩ரு. | யசோதரையும், சித்தார்த்தனும் | .... 83 |
| ௩சு. | நடனம் | .... 86 |
| ௩எ. | பூகம்பம் | .... 87 |
| ௩அ. | பகைவர் வாழ்த்து | .... 91 |
| ௩கூ. | வீழ்ந்த கொம்பு | .... 94 |
| ச௦. | ஏசுநாதர் முறையீடு | .... 97 |
| சக. | நீ | .... 99 |
| சஉ. | ஈவாய் | .... 100 |
| ச௩. | நவமணி | .... 101 |
| சச. | குகை | .... 103 |
| சரு. | கவியும், காலனும் | .... 104 |
| சசு. | உதயராகம் | .... 107 |
| சஎ. | இரக்ஷகன் | .... 108 |
| சஅ. | இந்திர கானம் | .... 110 |

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை



அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

# கவிக்கனவுகள்

## க. இன்பக் கனவு

இன்பக் கனவிந்த வையம் !—அதில்
  எங்கும் கலைவெள்ளம் பொங்குதையே !—குயில்
அன்பென் றகவுது கேளாய்—நெஞ்சில்
  ஆசைகொண் டாடுதோர் பொன்மயிலே !—இதைத்
துன்பக் கனவென லாமோ ?—முன்னே
  தோன்றிடும் வாழ்க்கை அமுதமையே—எல்லாம்
பண்பெற்ற காதலின் ஊற்றும்—அதன்
  பாட்டுடன் ஆனந்தக் கூத்திடுவோம் வாரீர் !   (இன்ப)

மங்கலத் தாயின் மடியில்-இந்த
  மாநில மெல்லாந் தவழ்ந்து வளருது
திங்களை வாவென் றழைக்கும்—அந்தச்
  சேயின் கரத்திலோர் செங்கோல் விளங்குது
செங்கதிர்க் காலை மலரை—கொஞ்சும்
  தென்றலி லேதிரு வாய்மொழி கேட்குது
*தங்க மலைநதிப் பாட்டில்—ஜீவ
  தத்துவக் காவியம் தாவி வருகுது
இன்பக் கனவிந்த வையம் !   (இன்ப)

---

* காலைக் கதிரொளியால் மலைநதி தங்க நிறமானது.

## உ. கவலையை மறப்போம்

வந்து வந்து செல்லும்—இந்த
வானப் பறவையினுள்
விந்தை விந்தைக் கனவை—வைத்த
வித்தகனைப் பணிவாம். க

கொட்டிக் கொட்டி நிறைப்பான்—ஆசைக்
குடத்தினை யிறைவன்
வெட்டி விட்டு வளர்ப்பான்—இந்த
வினைவளர் வனத்தை. உ

புதை குழியி னின்றும்—ஒரு
பூஞ்செடியாய் நகைப்பான்.
விதையை நட்டறுப் பான்—உப்பில்
விண்ணமுதம் படைப்பான். ங

மாரியின் கண்ணீ ரால்—பசும்
வசந்த மாக்கிடுவான்
காரிர வின்மு டிவில்—இளங்
காலையைக் காட்டிடுவான். ச

கவலையை மறப் போம்—அவன்
கதைநம் வாழ்க்கையெல்லாம்
நவரசப் பட லம்—அந்த
நாடகத்தின் இயல்பாம். ரு

சீவப் புல்லாங் குழலை—அவன்
செங்கையி லீந்திடுவோம்
தேவ கான முயிர்ப்பான்—என்றுந்
திவ்யராக மளிப்பான். ௬

அன்புக் கனி பிழிவோம்—அதில்
ஆத்மசுகம் பொழிவோம்
இன்பக் கலைக் குடத்தில்—ஏந்தி
இன்னுயிர்க் கூட்டிடுவோம். ௭


மோத்தி

## ௩. அமுதம்

அள்ளிப் பருகிடுவோம்—அழகின்
அமுத மெங்கிலுமே
வெள்ளமாய்ப் பொங்குதையே—உயிர்
வீணையின் உள்ளத்திலே. க

மதி நிலவினிலே—அல்லி
மலர்க் குளத்தினிலே
கதி ரொளியினிலே—பூத்த
கமலக் காட்டினிலே. உ

காலை யமைதியிலே—வசந்தக்
காற்றுக் குழலினிலே
சோலைப்புள் ளோசையிலே—இரசந்
தோய்ந்த கனிகளிலே. ௩

காதல் வளர்ச்சியிலே—நல்ல
காவிய மாலையிலே
நாதக் கனவினிலே—இனிய
நண்பர் குழுவினிலே. ௪

தாயின் கருணையிலே—அன்பு
தழைக்கும் வீட்டினிலே
சேயின் மழலையிலே—நாட்டின்
செல்வத் திருவினிலே. ௫

வானத்திலே யமுதம்—தியாக
வாழ்க்கையிலே யமுதம்—ஆத்ம
ஞானத்திலே யமுதம்—பராசக்தி
நாட்டத்திலே யமுதம். ௬



## ௪. இப்படி வாழவேண்டும்

சுற்றிலும் சோலைப் பசுமை—அங்கே
சொக்கழ காகச் சுடர்மனை கட்டி
வெற்றுரை வீண்பொழு தின்றி—கையால்
வேலைசெய் துண்டு, கலைவெறி யேறி
வற்ருத நீரோடைப் பாட்டில்—கவி
வாணியின் பாட்டும் கலந்திட வாழ்வேன்
புற்றரவும் விட மற்றே—அன்புப்
புல்லாங் குழலுக் குருகிடச் செய்வேன். ௧

பசிக்குப் பழங்களை யுண்பேன்—கன்று
பட்சிக ளோடு பரவசம் கொள்வேன்
சசிரவி மீன்கணம் போலே—வெளிச்
சத்த மில்லாது சகத்திற் குழைப்பேன்
வசந்தக் குயிலோ டிசைப்பேன்—காலை
வாசம லர்களு டன்புன் னகைப்பேன்
நிசியின் மவுன வெளியில்—ஆத்ம
நேயனைக் கூடி நினைப்பை மறப்பேன். ௨

அஞ்ச வருவதும் உண்டோ?—நெஞ்சில்
ஆத்ம சமத்துவம் பூத்துக் கனிந்தால்
பஞ்சபூதச் சட்டை போர்த்த—இந்தப்
பாருயிர் யாவிலும் ஒருயிர் காண்போம்
வெஞ்சமர் கொண்ட பகையும்—ஒரு
வேடிக்கைத் தோழன்போல் ஆட வருவான்
தஞ்சம் பராசக்தி யென்றே—ஒரு
தாயிடம் சேயெனத் தூயராய் வாழ்வோம். ௩

## ரு. கலையெழுச்சி

காரிருட் கூந்தலினுல்—மகா
காளியிவ் வுலகினைக் கவர்ந்து நின்ருள் ;
தாரகைத் திருமணிகள்—எங்கும்
தணல்பொறு மலரெனத் தளுக்கு நிசி,
வாரிசம் உறங்குநிசி—அல்லி
வனப்புற மணவிருந் தளிக்கு நிசி.
பாரெலாம் அடங்கியபின்—மோனப்
பரவச வெளியினைப் பார்த்தி ருந்தேன். க

விண்சுடர்ப் பவனியிலே—அதில்
விளைந்திடும் ஓமிசை வீணை யிலே
தண்கடல் முரசினிலே—என்னைத்
தழுவித் தழுவிக் கொஞ்சும் தென்றலிலே,
எண்ணத்தை இழந்திருந்தேன்—என்
இதயத்தைத் திறந்தொரு மதி முகத்தாள்
கண்மனங் கவர்ந்துநின்ருள்—அவள்
கனவினில் என்னுயிர் கலந்து நின்றேன். உ

செஞ்சுடர் மேனியினுள்—என்
சித்தத்திற் குடிகொண்ட சக்தி யிவள் ;
அஞ்சன மையிருளை—ஓர்
அமுதுகு நகையினுல் அழித்து விட்டாள்.
கஞ்சமலர் விழியால்—ஞானக்
கதிர்களைப் பொழிந்தாளென் மதியி னிலே
நெஞ்சினில் நினைத்ததெல்லாம்—வெகு
நேயமோ டுரைத்தனள் சேயெனக் கே. ௩



காதலின் கனவிவளே—நெஞ்சக்
கடவுளை விளக்கிடுஞ் சுடரி வளே
மாதரின் அழகிவளே—வீர
மார்பினின் றெழுந்திடுங் கனவி வளே
வேதமிவள் வீணையொலியே—என்னுள்
விளங்கிடு மாவேச விளக்கி வளே
நாத பராசக்தி—அன்னை
நடஞ்செயும் இடமெல்லா நலம் பெறுமே. ௪

கலையெனும் பெயருடையாள்—உள்ளம்
கனிந்தெழும் அழகெனும் வடிவுடை யாள்
மலையெழும் அருவியைப்போல்—அன்பர்
மனத்தினிற் கவிதரும் வாணி யிவள்
உலகிவள் சிற்பமடா—மாந்தர்
உயிர்க்கிவள் புன்னகை யின்ப மடா
நிலையிலாக் காலரதம்—இந்த
நேரிழை செலுத்தமுன் னேறு தடா ! ௫

கல்லினுக் குயிர்தருவாள்—கவிக்
கனவினுக் கினியசொல் வனமளிப் பாள்.
தொல்புவிக் காட்சி யெல்லாம்—ஒரு
தூரிகை முனையிலே துலக்கிடு வாள்.
நல்லிசை விருந்தளிப்பாள்—இவள்
நாடக மேடையிஞ் ஞால மெல்லாம்.
எல்லையில்லா வழகி—இவள்
எழுந்ததும் இரவியும் எழுந்த துவே ! ௬

## ௬. அவள் யார்?

புன்னகை யுடன் பூப்பறித் தீவாள்
பூங்கையாற் கண்ணைப் பொத்திச் சிரிப்பாள்
மின்னைப் போல மிளிர்ந்து மறைவாள்
மீனைப் போல விழிகள் அசைப்பாள்
பின்வந் தென்பெயர் பேசி யழைப்பாள்
பிள்ளை போல்விளை யாடவரு வாள்
அன்னை போலெனக் காதர வாவாள்
அதிசயம்! அவ ளார்?......கலைவாணி. க

காலைக் கன்னியின் காந்த நகையில்,
கான் மலர்களின் காட்சிப் பொலிவில்
சோலைப் புள்ளின் சுதந்தரப் பாட்டில்
சுடர் பரவிடுஞ் சூரியக் கண்ணில்
மாலைச் சாந்த மலர்மணக் காற்றில்
வான் மதியில் வளர்கவி யின்பம்...
பாலைக் கன்று பருகுவ தொப்பப்
பருகு விப்பவ ளார்...? கலைவாணி. உ

இலை விரல்களால் இன்னிசை மீட்டி
என்னு ளத்தை யியக்குவள் பாட்டால்;
மலை யருவியி லேமறை பாடி
வாழ்வி னுட்பொருள் வாய்விட் டுரைப்பாள்.
அலைக் கரத்தினுல் ஆர்வ மெழுதி
அழித் தழித்துத் திருநடஞ் செய்வாள்
உலகம் என்சொல் விரிவென் றுரைப்பாள்
உண்மை யாரிவள்? ஓம் கலைவாணி. ௩

## எ. எனது காதலி

காதலி வந்தாள்—கவிக்,—காதலி வந்தாள்
சோதி மயமான சுத்த மனத்திலே
நாத வடிவாக நர்த்தனம் செய்தின்பக் (காதலி)

மலர்மணக் காலே—தென்றல்,—மங்கலம் பாட,
கலகலவெனப் புட்கள் சுலந்து வரவேற்கச்
சலசலத் தருவிகள் தாவு *மலேமிசை (காதலி)

அருண முகத்தாள்—பதி,—னுயிரங் கலேயாள்
கருணே யகத்தினள் காந்த விழியினள்
வருணனேக் கெட்டாத வானத் திருமகள் (காதலி)

அழகென்னும் பேராள்—என்வாழ்வினுக்,—கமுதினும் இனியாள்
பழகும் இயற்கையாம் பாங்கியுடன் கூடி,
இளந்திரு நகைவீசி என்னுள்ளம் பொங்கிடக் (காதலி)

பூத்தொடுத் தீவாள்—நாணப்,—புன்னகை வாயாள்
தீத்திகழ் வெண்மரைச் செவ்வியள் என்கையைக்
கோத்து விழிமலர்க் கோணத்தாற் பார்த்தனள் (காதலி)

அன்னப் பெடைபோல்—என்,—அருகே நடப்பாள்
முன்னேக் கதைகளும், பின்னேக் கதைகளும்
என்னே மகிழ்விக்கச் சொன்னவண் ணமாவாள் (காதலி)

---

* பொதிகைமலே



## கவிக் கனவுகள்

கனிரச முண்போம்—உலகெல்லாம்,—கலைரச முண்போம்
இனிய பொழில்களின் இன்ப நிழலிலே
பனிமல ருடனன்புப் பாமாலை சூடுவோம். (காதலி)

அந்தி மயக்கில்—சற்றே,—ஆடி மறைவாள்
புந்தி மயங்கியென் பொன்மணிப் பாவையை
எந்தத் திசையிலும் ஏங்கிநான் கூவுவேன். (காதலி)

மீனணி வானில்—மயிலென,—மெல்ல வருவாள்
தானேதா னுகுந் தனிமையிற் சேர்ந்தென்னை
ஞானச் சுகத்தினில் மோனத்துயில் கொள்ளும் (காதலி)

## அ. கவியும், கனவும்

கனவே கவிக்கினிய காதலியே வாராய்
மனவேக வாகனத்தில் ஏறி—நனவுலகம் க

அத்தனையும் சுற்றி யளந்திடுவோம் ஓர்நொடியில் ;
சித்தத்தால் விண்ணைச் செயித்திடுவோம்—மித்தையென உ

வேதாந்தி சொல்லுவதை மெய்யென்று காட்டிடுவோம்
நாதாந்த மானநம் நாடகத்தாற்—பேதமின்றி ங

வாழ்வமுதம் உண்போம் ; வனங்களிலே கூடிடுவோம்
ஆழ்வோம் அழகின் அகத்தினிலே—சூழியற்கை ச

எண்ணின்றிக் காட்டும் இன்பதுன்பக் காட்சிகளிற்
கண்கட்டி யாடிடுவோம் ; கட்டற்ற—பண்பாடும் ரு

நீலக் கடல்விரிவில் நீண்ட மலைமுடியில்
காலத்தேர் ஊரும் கதிரொளியில்—பாலொத்த சு

ஓடையிலே தென்றலுடன் ஒய்யார மாய்ப்பூக்கள்
ஆடையிலே அன்னங்கள் கூட்டமாய்த்—தேடிவரும் எ

ஞானி மனம்போன்ற நல்லாற்றி லேநமது
வானின்பம் பொங்கி வளருதுபார் !—தேன்வண்டார் அ

காலைப் பொலிவினிலே காவியங்கள் கொய்திடுவோம்
மாலை யமைதியிலே மந்திரங்கள்—ஆலிப்போம் கூ

## கவிக் கனவுகள்

'குக்கூ' வெனநாம் குயிலுடனே கொஞ்சிடுவோம்
தக்கத் தகென மயிலுடனே—சொக்கி க௦

நடஞ்செய்வோம் ; ஞாலமெல்லாம் நாமிருவர் தீட்டும்
படமெனநி ரூபிப்போம் பாவாய்—கடல்மணலிற் கக

சின்னஞ் சிறுவருடன் சிற்றில்விளை யாடிடுவோம்
மன்னர் அரியணைமேல் வைகுவோம்—கன்னியரின் கஉ

உள்ளத்திற் காதல் உருவங்கள் தோற்றிடுவோம்,
கள்ளொத்த காதலின்பப் பாட்டிசைப்போம்—விள்ளரிய கங

தெய்வப் பொருளைச் சிறுபுள்ளிற் பேசிடுவோம்
மெய்வியர்க்க வேலைசெய்யும் தொண்டருக்குக்—கைகளிலே

ஆற்றல் பெருகிடநாம் ஆனந்தப் பண்ணொலிப்போம்
வேற்றுமைகள் எல்லாம் விலகிடவே—காற்றைப்போல் கரு

'ஒற்றுமைவாழ்' வென்றே உயிரிற் கலந்துரைப்போம்
அற்புதங்கள் கோடி அணிவகுப்போம்—சொற்பனமே, கசு

வானமணிப் பூண்களையுன் வன்னமணி மேனியிலே
நானணிந்து காணு நலந்தாராய்—தேனே கஎ

நினைவென்னும் விண்புவியில் நீடினிது வாழ்வோம்
கனவென்னுங் கண்மணியே காண் ! கஅ



## ௬. காட்டு வனப்பினிலே

காட்டு வனப்பினிலே—சகியே,
காவியங் கொய்திடுவோம்
பாட்டுகள் பாடிடுவோம்—அங்கே
பாயும் அருவியுடன். ௧

கோளும் பொருமைகளும்—அகந்தைக்
கூத்துகளும் வெறுப்போம்
நாளும் இயற்கையிலே—சகியே,
நாம்விளை யாடிடுவோம். ௨

மாசற்ற புன்னகையைப்—புதிய
மலரிற் கண்டுவப்போம்
காசுற்ற மாந்தர்நகை—சுய
காரிய வேஷமடி ! ௩

வானம் வளைந்தணையும்—இந்த
வட்ட வுலகத்திலே
தேன்மலர்க் காற்றெனவே—சகியே,
திசைதிசை திரிவோம். ௪

மதி நிலவினிலே—தூய
மவுன நிசியினிலே
பதியன்பி லுதிக்கும்—அருட்
பாசுரங் கேட்டுவப்போம். ௫

அருணச் சோதியிலே—அழகை
அள்ளி யணைந்திடுவோம்—இறைவன்
கருணை ஆழியிலே—சகியே,
களிப்புடன் குளிப்போம். ௬



அமரர் கந்தையா நூலகள் லச்சு ...
அவ்வை ... சண்முகம் நூலகம்
அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்



## ௧௦. என் ரோஜாம்பா !

ஆடு ரோஜாவே—காலை
அழகு ரோஜாவே,
பாடுந் தென்றலுடன்—மணம்
பரவும் ரோஜாவே! ௧

கடிய முள்ளிடையே—நீ
கனிநகை புரிவாய்,
கடிய முட்களெல்லாம்—உன்னைக்
காக்கும் வாட்கணமோ ? ௨

உன்னைக் கிள்ளையிலே—என்
உயிர் நடுங்குதடி !
வன்மன வுலகம்—அழகை
வாழ வொட்டாதோ! ௩

சிறிய காலத்திலே—உனைப்போல்
சிரித்து வாழேனே ?—எல்லார்க்கும்
பிரிய மாகேனே—ஈகை
பேணி வாழேனே ? ௪

அகங் குளிருதடி—என்
அருண ரோஜாம்பா !
முகங் கசங்காதே—செல்ல
முத்தங் கொஞ்சுகிறேன் ! ௫



## கக. மின்னலுக்கு

மேகத் திரையைப் பிளந்து விரைகின்ருய்—மின்னலே—ஒரு
மோகன மின்சாரங் காட்டி மறைகின்ருய்—மின்னலே! க

தாகந் தணியத் தணல்நகை செய்கின்ருய் மின்னலே—என்னைச்
சோகத்தில் ஆழ்த்திநீ சொக்கி மறைவதேன்?—மின்னலே! உ

வெளிச்சங் காட்டி இருட்டை வெருட்டுவாய் மின்னலே—உடன்
பளிச்சென் றென்கண் பறித்துக்கொண் டேகுவாய்—மின்னலே! ௩

நில்லு நில்லெனக் கெஞ்சிடுவேன் உன்னை—மின்னலே—இங்கு
நில்லா வுலகியல் வாழ்வெனச் செல்லுவாய்—மின்னலே! ச

காண வுன்னையென் கண்ணைத் திறக்குமுன்—மின்னலே—நீ
நாணிக் கோணி நடித்தெங்கு செல்கின்ருய்?—மின்னலே! ரு

சிற்றிடை துவளச் செங்கால் வீசுவாய்—மின்னலே—உன்னைப்
பற்றிக் கொள்வேனென் ருேபயந் தோடினுய்?—மின்னலே! சு

தடதடவென் றிடிமுர சார்த்திட மின்னலே—நீ
நடன மாடு நயமென்ன சொல்லுவேன்—மின்னலே! எ

மன்னுல கில்வந் தென்னை யணையென்பேன்—மின்னலே—'அடா
என்னைப் போலத்தான் இவ்வுடல் வாழ்' வென்பாய்-மின்னலே! அ

ஞானவேட்கை கொண்டேயுனை நச்சுவேன்—மின்னலே—'அது
மோனம்' என்று மொழியொன் றெழுதுவாய்—மின்னலே! கூ



# கஉ. காலக் கடல்முன்

ஓலமிட் டிந்த உலகை விழுங்கும்
காலக் கடல்முன் கனவுகள் கண்டேன் !
திரைகள் துள்ளித் திருநடம் புரிந்த
காட்சியைக் கண்டேன் களைவெறி கொண்டேன் !
காற்றின் பாட்டைக் கேட்டு மகிழ்ந்தேன் !

முரசொலி கேட்டேன் அரசொலி கேட்டேன்.
திரை திரையாகச் சேனை யெழுந்து
முண்டிப் பொருதிச் சண்டை யிட்டு
நுரை நுரையாக மறைந்திடக் கண்டேன்.
துள்ளின மீன்கள் துள்ளின சங்கம் !

கண்ணியில் இடித்த கப்பலைப் போலே
'ஹா'வெனக் குமுறி ஆழ்ந்தன யாவுமே.
நி திரை முன்னே மண்மனை கட்டி
ஆடும் சிறுவரின் அமளியைக் கண்டேன் ;
"நானே பெரியவன் நானே உரியவன்

போநீ வெளியே ; போர்செய் என்னுடன் !
எனதே சமயம், எனதே நாடு ;
உன்தோல் கறுப்பே, என்தோல் வெளுப்பே
நானே ஆண்டான் ; நீயென் அடிமை"
என்றவர் சண்டை யிட்டதென் சொல்வேன் !

பக்கெனச் சிரித்துப் பாய்ந்தொரு பேயலை
விழுங்கி யெல்லாம் வீறிட் டதுவே !
மணல்வீ டில்லை ; மக்களு மில்லை ;
ஆட்டம் ஒய்ந்த அரங்கே கண்டேன்,
"ஏனிக் கொடுமை ?" என்று கூவினேன் !

"நானே காலம் நானே கோலம்,
வாழ்க்கையென் ஆடல் ! வாழும் உயிரெலாம்
என்பசிக் குணவே !" என்று மணலில்
எழுதி யெழுதி இசைத்தது கடலே,
'நீயுமென் உண'வென நீண்டதோர் அலையே !


மூர்த்தி

## கரு. கர்ச்சனை

கர்ச்சனை செய் கடலே—சுதந்தரக்
கர்ச்சனை செய் கடலே—ஸமரஸக்
கர்ச்சனை செய் கடலே—வேதாந்தக்
கர்ச்சனை செய் கடலே !

சச்சிதா னந்தப் பரம்பொருள் ஒன்றெனக்
கர்ச்சனை செய் கடலே—உலகிற்குக்
கர்ச்சனை செய் கடலே! (கர்ச்சனை)

தட்டுத் தடைகளை முட்டியெறிந் தின்பத்
தாண்டவஞ் செய் கடலே—பரவசத்
தாண்டவஞ் செய் கடலே—கைகள்கொட்டித்
தாண்டவஞ் செய் கடலே !

கட்டுகள் விட்டு விடுதலை யாம்வழி
காட்டிடுங் கடலே—கவலையை
ஓட்டிடுங் கடலே—ஞானக்கனல்
மூட்டிடுங் கடலே ! (கர்ச்சனை)

கண்ணிலத் தேவியைக் கட்டி முத்தமிட்டுக்
காத லிசை கடலே—வாழ்வின்
காதை யிசை கடலே—அத்யாத்மப்
போத மிசை கடலே !

எண்ணற வந்துவந் தேகும் பிறவிபோல்
இயங்கிடுங் கடலே—திரைகளால்
மயங்காத கடலே—காலத்துடன்
முயங்கிடுங் கடலே ! (கர்ச்சனை)

பொய்யக மாயை கலங்கிப் புறஞ்செல்லப்
போர்முர சடிப்பாய்—கடலே
போர்முர சடிப்பாய்—வெற்றி
வார்முர சடிப்பாய்....

மெய்யறி வின்பம் விளங்கிடப் பொன்னலை
வீசிடுங் கடலே—ஈசன்புகழ்
பேசிடுங் கடலே—கதிருண்டு
தேசிடுங் கடலே! (கர்ச்சனை)

அள்ள அள்ளமணி முத்தும் பவளமும்
அளித்திடுங் கடலே—நவநிதி
செழித்திடுங் கடலே—என் ஆர்வங்
குளித்திடுங் கடலே!

உள்ள வமைதியில் ஓம்தத்ஸத் ஓமென
ஒலித்திடுங் கடலே—மதியுண்டு
களித்திடுங் கடலே—மழைமுகில்
விளைத்திடுங் கடலே! (கர்ச்சனை)

நாத வெளியினில் வேதப்பொருள் பாடி
நர்த்தனஞ் செய்கடலே—புயல்கள்
மத்தளங் கொட்டிடவே—மீன்களெல்லாம்
தத்திக் குதித்திடவே...

ஆதி பராசக்தி யுன்னுருக் கொண்டனள்
அருட்பெருங் கடலே—வணக்கம்
அருட்பெருங் கடலே—வாழ்கநீ
அருட்பெருங் கடலே...! (கர்ச்சனை)

## கச. கதிரவன் சிரித்தான்

காலை பூத்தது, கனகம் பூத்தது ;
காவியம் போலே பூவினம் பூத்த ;
பூங்கா லுடனே பூத்தது புள்ளிசை ;
கண்கள் பூத்தன ; பண்கள் பூத்தன ;

நீலக் கடலையும், நீல வரையும்
பார்த்துப் பார்த்துப் பரவச மானேன்.
அமைதி அழகில் அமைதி யின்பம்...!
அமைதியைக் கெடுத்தன தமதெனும் சொற்கள்
கலகல வென்றே பலபல குரல்கள்
எழுப்பி என்னை வினவிய தென்னே—

—"இந்து சமயமா, இஸ்லா மியமா?
பைபிளா, தம்ம பாதமா வுண்மை?
சைவமா, வைணவ சமயமா பெரிது?"

* * *

"சாதி சமயத் தலைவலி யொழிக!
பாரும் கிழக்கே பரிதியை!" என்றேன்
அலைகளை யெல்லாம் கலையொளி யாக்கிக்
கலகல வென்று கதிரவன் சிரித்தான்.
மவுனச் சிரிப்பின் மர்ம மறியக்
கடலை நோக்கினேன், காற்றைக் கேட்டேன் ;
கடற்காற் றுரைத்த கட்டுரை கேளீர் :—



'விளக்கைக் காட்டிலும் விண்சுடர் பெரிது ;
மீனகந் தன்னிலும் வானகம் பெரிது ;
கயல்களைக் காட்டிலும் கடலே பெரிது ;
பேத புத்தி பிதற்றி யலையும்
சாதி சமய சாத்திர கோத்திரச்
சண்டையைக் காட்டிலும் சாந்தமே பெரிது ;
உரைகளைக் காட்டிலும் உள்ளமே பெரிது ;
தத்துவ நூலினும் சத்தியம் பெரிது ;
மதத்தைக் காட்டிலும் மானிடம் பெரிதே ;

ஒன்றே உண்மை உலகெலாம் அதுவே !"

இம்மொழி கேட்டுத் தம்மொழி இறந்தே
சமயப் பித்தர் சமரச ரானர்.
" இது நலம் " என்றே கதிரவன் சிரித்தான்.

## கரு. அழகுத் தெய்வம்

கார்ப்புயலை வெட்டுகின்ற கம்பி மின்னல் போலே
கவலையிரு ளோட்டியென்னைக் கண்பார்த்து நின்றாள்.
யாரென்றே யதிசயித்தேன்! அழகுமணித் தெய்வம்!
அன்னைசக்தி வாழ்கவென்றே பொன்னடியிற் பணிந்தேன். க

அன்புசொல்லித் தழுவியெனக் கானந்தந் தந்தாள்!
ஆர்வமுள்ள குழந்தையென மார்பகத்தில் உண்டேன்.
என்புருக நைந்துருகி 'என்மகனே' யென்றோர்
இன்பநகை புரிந்ததுவும், எங்கெங்கும் இருந்தாள்! உ

காலைமலர்த் திருமுகத்தில் கருணையமு தீந்தாள்;
கத்துகுயி லோசையிலே பத்தியங்கள் படித்தாள்;
சோலைமலர்ப் பொலிவினிலே சொக்குநகை புரிந்தாள்;
சுரும்புகளின் பாட்டினிலே சுருதியெனக் கீந்தாள்! ங

பளபளக்கும் பச்சைவளக் கம்பளத்தின் மீது
பாய்ந்துநட மாடுகின்றாள் பண்ணருவி பாட;
உளமகிழத் தென்றலிலே இளந்தமிழ்யாழ் மீட்டி,
உருக்குகின்றாள், இன்பவெறி பெருக்குகின்றாள் அன்னை! ச

உள்ளத்தில் மாசிருந்தால் மெல்லவில கிடுவாள்;
ஒள்ளியநல் லன்பருக்குத் தெள்ளமுத மாவாள்;
கள்ளங் கரவிருந்தாற் காறியுமிழ்ந் திடிப்பாள்;
காதல்கொண்ட தூயவரை வீதலின்றிக் காப்பாள். ரு

ஏராளப் பணக்குவையில் ஏமாந்து நில்லாள்;
ஏமாற்றுங் காமுகரை எற்றிவிலக் கிடுவாள்;
பாராளு வோர்க்குமிவள் தாராள மாகாள்;
பரிசுத்த யோகியரைத் தரிசித்து நிற்பாள்! சா

## கரு. அழகுக்கலை

அழகுத் தெய்வத்தை வாழ்த்தி வணங்குவோம்,
அழகுச் சோலையில் அன்புறக் கூடுவோம்,
அழகின் இன்பத்தை ஆருயிர்க் கூட்டுவோம்,
அழகை வாழ்வெனும் வீணையில் மீட்டுவோம்.

இய லழகை யிலக்கியம் ஆக்குவோம்,
இயற்கை யுள்ளத்தில் இன்னிசை காணுவோம்;
இய லுணர்வைச் சிலையில் இலக்குவோம்,
எழுது வோம்பட மாய்இயல் வாழ்க்கையை;
கயல்விழி, கனிவாய் மலர்க் கைகளால்
கருதும் பாவனை காட்டிநடஞ் செய்வோம்;
செயல்க ளாயிரஞ் செய்வோங் கலைகளால்,
செகத்தினிற் புதுச் சிற்பிக ளாக்குவோம். க

கலையி னுல்உல கொற்றுமை காணுவோம்,
கலையி னுற்கருத் தைவிரி வாக்குவோம்;
கலை மகளின் கவின்பெருங் கோயிலில்
கைகள் கோத்துக் களிப்புடன் ஆடுவோம்;
விலையி லாமல் விரைந்திடுங் காலத்தை
வீண்செய் யாது கலைவிளை வேற்றுவோம்;
நிலையி லாநதி நேரிய வாழ்க்கையை
நீண்ட காவிய மாக்குவந் தோழரே! உ

## கஎ. தென்றலுடன் கொஞ்சுதல்

தென்றல் வருகுது தென்றல் வருகுது
தேனுண்ட வண்டொலிக்க,
மன்றல் புரிந்து மலர்களைக் கொஞ்சி
மணந்திட மேனி-யெல்லாம்,
அன்றிலும், கிள்ளையும், அன்னமும், பூவையும்
அந்தி வணக்கம் செய்தே,
ஒன்றிநல் அன்புப் பெடையோ டுறங்கிட
ஓராட்டுந் தாயெனவே. க

மந்திர வேதங்கள் கீதங்கள் கோயில்
மணிகள் கிணீ ரெனவே,
சுந்தர மாதர் குரலும், விரலும்,
சுதியுடன் சொக்கிடவே
தந்திமித் தோமென மத்தளம் யாழைத்
தழுவி முழங் கிடவே,
சந்தம் பொழிந்து தவழ்ந்து வருகுது
சந்தனத் தென்ற லேயே ! உ

வெள்ளி நிலவைத் தழுவி விளையாடி
விம்மி வரும் காற்றே ;
பிள்ளை போல்வந்து மழலைகள் பேசிப்
பிரியம் வளர் காற்றே !
உள்ளங் குளிர வுனைமுத்தங் கொஞ்சிட
வுருவைக் காட்டா யோ ?
அள்ளிக் கலந்துன்னைப் பாட்டும் மணமும்போல்
ஆடித் திரி யேனோ ! ௩

சீவக் குழலிற் சுழன்றிசை பாடித்
திரியும் உயிர்க் காற்றே;
வாவென்று வான்மழை தன்னை யழைத்து
வளஞ்செய் பசுங் காற்றே!
தாவி யணைத்தென்னை மெய்யின்பந் தந்திடும்
தண்ணிளந் தென்ற லம்மா!
பூவெங்கும் உன்னுடன் போந்து முதல்வன்
புகழையே பாடே னோ? ௬

## கஅ. வெள்ளித் திங்கள்

உள்ளங் குளிரவருந் தென்றல்—குழல்
ஊதி இன்பவெறி யூக்கக்
கள்ளவிழ் அந்திமலர் நகைக்க—வண்டு
காதல் காதலென்று முரல
வெள்ளித் திரைகள் உன்னை யணைய—மார்பு
விம்மிப் புரண் டலைந்து கூவ
பிள்ளைச் சிறுகரங்கள் அழைக்க—நெஞ்சிற்
பித்தேற்றுஞ் சந்திரனே வாராய்! க

அல்லி விழித்துன் ஒளிபருகக்—கண்
அயர்ந்து தாமரைகள் உறங்க,
சொல்லை விழுங்கும் ஒருகனவில்—ஆழ்ந்து
ஜோடிப் புள்ளினங்கள் சொக்க
எல்லை யற்றவெளி யெங்கும்—ஓம்
என்றோர் இனியகுரல் ஓங்க—அந்தி
முல்லை மலர்ந்து மணம்வீச—விண்
முடிமணி போல்வருக திங்கள்! உ

ஆடுஞ் சிறுவர் களிதுள்ள—தாயர்
அம்புலி காட்டியமு தூட்ட—அன்பர்
பாடும் பஜனை யிசைபரவ—வெண்
பட்டு நிலா விரிந்தவெளியில்,
கூடும் நண்பர் கதைசொல்ல—மனங்
குளிர மகிழ்ந்து தனியின்பம்
நாடும் வதுவரர் கொண்டாட—வாராய்!
ஞாலத்திற் கிதஞ் செய்யுமதியே! ௩

மீனார் மலர்க்குளத்தி னூடே—தவழ்
 வெள்ளி யன்ன மெனவாராய்!
வானக் கடல் கடந்துமெல்லச்—செல்லும்
 வன்னத் தோணியென வாராய்!
மோனப் புன்னகையி னாலே—எம்மை
 மோகப் படுத்து முகங்காட்டி,
தேனொத்த செந்தமிழ்போல் அமுதம்—பொழி
 திங்கள் வருக நலம்பொங்க! ௪

## ௧௧. நிலா விளையாட்டு

[தமிழ்ப் பெண்கள் விளையாட்டுகளில் நிலா விளையாட்டு ஒன்று. பெண்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து, எதிரெதிர் நின்று பாட்டுப் பாடிக்கொண்டே வரிசைக்கு வரிசை தாவி விளையாடுவர். இப்பாட்டில் முதல் அடி பாடி ஒரு பெண் எதிர்க்கட்சிக்கு ஓடுவாள். அவள் நிற்கும் இடத்தில் இருந்த பெண் இரண்டாம் அடி பாடி எதிர்க்கட்சிக்குச் செல்வாள்.]

| முதற் கட்சி | இரண்டாங் கட்சி |
| --- | --- |
| மானே மரகதமே | சோலை மயிலே இளங்குயிலே! |
| தேனே திருமகளே | மலர் செழித்த பசுங்கொடியே! |
| வெள்ளிப் படகொன்று | வானில் விளங்குவதைப் பாரடியோ! |
| புள்ளைப்போ லேபறந்தே | அதிற் போகோமோ பெண்ணமுதே! |
| நீள விரிந்ததம்மா | மேலே நித்திலப் பந்தலைப்பார்! |
| வாளொத்த கண்ணிமைத்தே | நம்மை வாவென்னும் தாரகையே! |
| விண்ணெல்லாம் பொன் [னெழுத்தாம் | அந்த விரிநூலைக் காணடியோ! |
| கண்ணாளர் கையெழுத்தாம் | எல்லாம் காதல் விளக்கமடீ! |
| தங்கக் குடத்தினிலே | தோழி தழைத்தோங்கும் பாலமுதைத் |
| திங்கள் பொழியுதடீ | அது தெவிட்டாத வெள்ளமடீ! |
| சோதி மதிமுகமே | ஒன்றும் சொல்லாதேன் புன்னகைப் [பாய்? |
| தூதொன்று கொண்டு [செல்லாய் | சாந்தச் சுடரோங்கும் ஓதிமமே! |
| அல்லிக் குளத்தருகே | நாங்கள் அங்கண் விழித்திருந்தே |
| முல்லைத்தென் றல்வருத்த | எங்கள் முதல்வனை நோக்குகின்றோம்! |



பட்டு நிலாவிரித்தே இன்பப் பாட்டொன்றைப் பாடுகிறான் ;
கட்டெல்லாம் விட்டுவந்தோம் எங்கள் கண்ணனோ டாடிடவே!
முக்கண்ணன் செஞ்சடையில் வளர் மோகன வெண்பிறையே !
சொக்கனைக் காதலித்தோம் அதைச் சொல்லித் துணைபுரிவாய்.
வட்ட முழுமதியாம் அந்த வைரமணித் தட்டினிலே
வெற்றிலை பாக்குவைத்தே நம்மை விரும்பி யழைக்கின்றான்
மானே வளர்மதியால் இந்த வாழ்வுக் கடல்பொங்கி
மோனை யெதுகையில்லாப் பாட்டை முழக்குவதைக் கேளடியோ!
கயலோடும் ஆற்றருகே அன்புக் கண்ணனைக் கண்டதுவும்
புயலேறும் இல்லறத்தில் பட்ட புண்ணெல்லாம் போச்சுதம்மா!
கவிதைச் சிறகடித்தே தோழி ககனத்தில் ஏறிடுவோம்
புவிமீதில் அங்கிருந்தே நல்ல புதுவாழ்வை நாட்டிடுவோம்
இயற்கை வனத்தினிலே தோழி இறைவனை உட்கலந்தே
இயல்பாக வாழ்ந்திடுவோம் தோழி எல்லாரும் இன்புறவே!

## ௨0. புன்னகை வெள்ளம்

பொங்குதே புன்னகை வெள்ளம்—வானும்
 பூமியுங் கூடிக் குழைந்திடும் போதிலே!
எங்கிலும் காதல் விருந்தாம்—அதில்
 எத்தனை யெத்தனை முத்தழ குத்திரள்!
செங்கதிர்க் காலையின் மார்பில்—எழும்
 தீயிற் பிறந்த திருக்களை யென்சொல்வோம்!
திங்க ளிரவினைச் சுற்றி—அங்கே
 சிந்திக் கிடக்குதே தெய்வநகை மலர் (பொங்)

மேகத்தைக் கூடி முயங்கும்—அந்த
 மின்னல்செல் நாட்டியம் என்னெனச் சொல்லுவோம்!
தாகத்தைத் தீர்க்கும் அருவி—சிவ
 தாண்டவ மாடித் தவழ்வதை யென்சொல்வோம்!
சோகத்தைப் போக்கிடுஞ் சோலை—அதிற்
 சொக்கு மலரிற் சிரிக்குமென் காதலன்
போகத்தை வாழ்வெனச் சொல்வோம்—அதிற்
 பூத்திடும் ஆனந்தம் புன்னகை யானது. (பொங்)

அன்னந் தவழ்ந்திடும் பொய்கை—அதில்
 ஆயிரந் தாமரைக் கண்கள் அடாடாடா!
பொன்னிறக் காலைக் கதிரால்—அவை
 பூரித்துப் பொங்கி விரிந்தென்னைப் பார்த்திடும்
புன்னகை யின்பமென் சொல்வேன்!--அந்தப்
 பொன்னகைத் தேனைப் புசித்துக் களித்தபின்
இன்னிய காட்சி யுலகம்—எல்லாம்
 இன்ப மயமென நம்பி மகிழுவோம். (பொங்)

## உக. வான் விளக்கம்

ஞானி யுள்ளம் போலே—வியன்
ஞால மீ தெழுந்த—நீல
வான் வளைவைப் பார்த்தேன்—அடடா
வர்ணச் சேலை கட்டி—சக்தி
நானென் றங்கு நின்ருள்—காலை
நாண்ம லர்கள் சூடிச்—சாந்த
மோன ஞாயி றென்னும்—ஒரு
முத்துப் பூத்த தையே ! க

கோடி மீன்க ளெங்கே ?—ஆந்தை
கூவுங் கங்கு லெங்கே ?—எல்லாம்
ஓடிப் போச்சு தையே—அரு
ளுண்ட தொண்டர் வினைபோல் !—கண்
மூடித் தூங்கு வாரோ—பூ
முகை யவிழ்ந்த பின்னும் ?—சுற்றும்
ஆடிப் பாடி வையம்—தொழில்
அரங்க மாச்சு தையே ! உ

எங்குஞ் சோதி வெள்ளம்—ஒரு
இந்த்ர ஜால நகையால்—புவி
தங்கக் கோயி லாச்சே—சிவ
சக்திக் கோலம் ஆண்பெண்—சுப
மங்க லஞ்செய் மனையில்—வாழ்வின்
வளமை யோங்கு தையே—இன்பம்
பொங்கப் பார்த்து நின்றேன்—சுழல்
பூவின் அற்பு தங்கள் ! ங



பொன் னுயிர்த்த கதிரோன்—தணல்
　　போல மேற்கே சென்ருன்—அந்தி
வன்ன மேனி தாங்கி—வாச
　　மல்லி கை முடித்தே—சக்தி
முன்னர் வந்து நின்ருள்.—நீண்ட
　　மோக னக்க னுவில்—முற்றும்
என்னை யான் மறந்தேன் ;—தென்றல்
　　எழுப்பக் கண் விழித்தேன் ! ௪

மாய மென்ன சொல்வேன் !—கனல்
　　* வைரங் கோடி சூடி—கருஞ்
சாயச் சேலை கட்டி—சின்னத்
　　† தங்கக் கிண்ண மேந்தி—சக்தித்
தாயமுத மீந்தாள்—அதைத்
　　தாங்கி யுண்ட வுடனே—என்றுஞ்
சேய்போ லின்ப முற்றேன்—இனிச்
　　சென்மத் தொல்லை யில்லை ! ௫

யானைக் கூட்டம் போலே—‡மேகம்
　　அந்த ரத்தைச் சூழ்ந்தே—நல்ல
மோனை முத்தமிழ் போல்--இடி
　　முழங்கு கின்ற தையே !—அருட்
சோனை மாரி யூடே—§ மின்னல்
　　சொலித்தென் னுட் புகுந்தே—$ பர
வானைக் காட்டும் போதே—நான்
　　மவுன மானே னையே ! ௬

* விண்மீன்கள். † மூன்ரும் பிறைச் சந்திரன். ‡ கருணை மேகம். § அருளறிவு. $ துரியவிண்.

## உஉ. குயிலும், கூண்டுக் கிளியும்

[தங்கக் கூண்டில் ஒரு கிளி செல்வமாக வளர்கிறது. அருகே ஒரு மாமரம்; அதில் ஒரு குயில் பாடுகிறது. அக்குயிலை "இங்கே வா! என் கூண்டில் நன்ருயிருக்கலாம்; ஏன் வீணுக அங்குமிங்கும் அலைகிருய்?" என்று கிளி அழைக்கிறது. குயில் அதற்குப் புத்தி சொல்லுகிறது.]

கிளி

தங்க மனையினைப் பாரடி—அடியென்
　　தங்கக் கொலுசினைப் பாரடி!
எங்கும் அலையாமல் வாழ்கின்றேன்—இவர்
　　ஈந்த கனிகளை யுண்கின்றேன்;
இங்கெனக் கென்ன குறையடீ—பூனை
　　ஏறி வராதிந்தக் கூண்டுளே!
எங்கலை கின்ருய், குயிலக்கா—நீயும்
　　என்னோ டிருந்திசை பாடடீ! க

குயில்

குக்கூகூ குக்கூ கூ தங்கச்சி—சற்றே
　　கோபப்ப டாதிதைக் கேளடீ!
திக்கெல்லாந் தாவிப் பறந்திட—நீள்
　　சிறகைக் கொடுத்தவன் மூடனே?
சொக்குத்தங்கம் எனப் பீத்துருய்—இது
　　தொத்தடி மைச்சிறை யல்லவோ?
துக்கமென் மார்பை யடைக்குதே—ஏண்டீ
　　தோழீநீ கைதியாய்ச் சாகிருய்? உ



வன்ன வியற்கை யழகினில்—வாழா
வாழ்வு வனுந்தர மல்லவோ ?
சொன்னக் கனியெனச் சூரியன்—எங்குஞ்
சோதி யமுதம் பொழிகின்ருன்.
உன்னுட லுக்கவ் வொளியுண்டோ ?—மதி
யூற்றுவெண் பாநில வுண்பையோ ?
அன்னிய மாய வலையிலே—சிக்கி
ஆன்மாவைக் கொல்லாதே தங்கச்சி ! ௩

தீந்தமிழ் போன்ற மணத்தென்றல்—வீசுந்
தேங்கனிச் சோலை யுனக்குண்டோ ?
காந்தரு டன்கூடிக் குஞ்சுகள்—வளர்
காத லினிமை யுனக்குண்டோ ?
சாந்தவிண் ணேறிப் பறந்திடும்—அந்தச்
சந்தோஷ வாழ்க்கை யுனக்குண்டோ ?
மாந்தரை நாமொரு கூண்டிலே—வைத்து
மாங்கனி தந்தால் இருப்பரோ ? ௪

காலையி லேயிரை தேடுவோம்—பசுங்
காடுகளிற் கூடிப் பாடுவோம்—அந்தி
மாலையிலே விளை யாடுவோம்—பின்பு
மங்கல நன்மனை சேருவோம்—அங்கே
கோலக் கவிக்கன வென்னவே—சுகங்
கொண்டு மயங்கித் துயிலுவோம்—இந்த
ஞாலமெல் லாஞ்சிறு நெஞ்சிலே—ஒரு
நாடகக் காட்சிபோற் காணுவோம். ௫

## கிளி

உண்மையி லுண்மை குயிலக்கா!—கூண்டை
    ஓங்கி யுடைக்குதென் ஆத்திரம்—ஒரு
மண்ணும் பயனின்றி யிப்படி—நான்
    மாய மயக்கினில் வாழ்வதோ?
கண்ணுல கெல்லாமென் வீடடீ—அதிற்
    காற்றினைப் போலே யுலாவுவேன்
விண்ணெட்டச் சென்று மகிழுவேன்—இதோ
    விடுதலைக் கேவழி செய்கிறேன். கூ

## உ௯. பறவை இன்பம்

சின்னஞ் சிறு வுடலாம்—கூர்ந்த
செங்கனிபோல் அலகாம் ;
வன்னப் பசுஞ் சிறகாம்—இரு
மாயக் கருவிழியாம் ;
சன்னக் குறுங் காலாம்—இந்தச்
சாந்தக் கிளிபோலே
என்னுயிர் வாழாதோ—கவலை
யின்றித் திரியாதோ ? க

சோலைக் கனியுண்பேன்—ஈசன்புகழ்
சொல்லிச்சொல்லி மகிழ்வேன் ;
காலை மலருடனே—கொஞ்சுங்
காற்றுடன் கொஞ்சிடுவேன்,
மாலைச் சிவப்பினிலே—ஆகாய
வங்க மெனப் பறப்பேன்,
வேலைக் கடலையுழும்—படகின்
மீது நடந்திடு வேன் உ

பஞ்ச மெனக் குண்டோ—வயிற்றுப்
பார மெனக் குண்டோ ?
வஞ்ச மெனக் குண்டோ ?—விசன
வாடை யெனக் குண்டோ ?
அஞ்சாது காதலிப் பேன்—என்
அன்புப் பெடை யுடனே
குஞ்சுக் கிரை கொடுப்பேன்—சுதந்தரக்
கூடு கட்டி வளர்ப்பேன். ௩



## கவிக் கனவுகள்

சிட்டுக் குருவியைப் போல்—ஒரு
சிக்கின்றி வாழேனோ
பட்டு நிலாவினிலே—அன்னத்துடன்
பறந்து செல்லேனோ ?
வட்ட மிடுங் கருடன்—அதனுடன்
வானை யளாவேனோ ?
கட்டுகளை யுதறிக் குயிலெனக்
காவியம் பாடேனோ ? ௪

கொக்குத் திருக் குலங்கள்—விமானக்
கூட்டமெனப் பறக்கும்—அந்தத்
திக்கினி லென் மனமும்—எதையோ
தேடிப் பறக்குதம்மா !
சக்கர வாகத்தைப் போல்—உப
சாந்த நிலாவினிலே
சொக்கும் பரவ சத்தால்—அருட்
சோதியைப் பாடேனோ ! ௫

கொண்ட லாத்தி யுடனே—நாளுங்
கொஞ்சி மகிழேனோ ?
வண்டுடன் ஓமொலித் தே—ஞான
மலரைத் தேடேனோ ?
கண்ட திசையெல்லாம்—உயிர்க்
கண்ணனைக் காணேனோ—மனஞ்
சென்ற திசை யெல்லாம்—பேரின்பத்
தேங்கனி யுண்ணேனோ ! ௬



## ௨௪. கவிக் குருவி

புள்ளுருக் கொண்டுவந்தேன்—உன்னுடன்
பொங்கி மகிழ்ந்திடவே
துள்ளு மனச்சிறகால்—வானைத்
துருவிக் கொண்டுவந்தேன். க

நாதக் கனவினிலே—பிடித்திந்த
ஞாலத்தைக் கொண்டுவந்தேன்
காதல் பெருகுயிரை—உனக்கே
காணிக்கையாய்க் கொணர்ந்தேன். ௨

சுதந்தர வெளியில்--இருவரும்
சுற்றித் திரிந்திடுவோம்.
இதந்தருங் குரலால்—வாழ்வின்
இன்பத்தைப் பாடிடுவோம். ௩

காடு வனமெல்லாம்—சகியே,
கனிம ரங்களெல்லாம்
வீடு நமக்கன்றோ—நமக்கினி
விசன மேதுக்கடி ? ௪

அந்தர மின்னணுக்கள்—நடனம்
ஆடிச் சுழன்றிடவே
சுந்தரப் பாட்டொலிப்போம்—ஓங்காரச்
சுருதி யோடிணைந்தே. ௫

ஆகாச வீதியெல்லாம்—சகியே,
ஆனந்த வீதியடி !
தேகச் சுமையறியோம்—கவலையாற்
சித்தந் தளர்ந்தறியோம். ௬

கோடி யழகணிகள்—உலகெங்கும்
குலுங்கு கின்றதடீ—இங்கே
கூடிக் குழைந்திடுவோம்—சுயேச்சையாய்க்
கூடுகட்டி வாழ்வோம். எ

மேகப் படலத்திலே—தவழ்கின்ற
மின்ன லொளியினைப்போல்—உன்
மோகப் படலத்திலே—என்னுவி
மூழ்கித் தவழுதடீ! அ

## உரு. அருவிப் பாட்டு

கொட்டு கொட்டு குற்ருலத் தருவியே
　　கோடி மின்னல் இடியெனக் கூடியே !
கொட்டு கொட்டுவெம் போர்முர சென்னவே
　　கோடி சிங்கக் குரலெனக் கர்ச்சித்தே !
எட்டுத் திக்கும் எதிரொலி வீறிட
　　ஈனத் தீமைகள் ஓட்டம் எடுத்திடத்
தட்டுத் தட்டுத் தடாரென வேகமாய்த்
　　தாவித் தாண்டவஞ் செய்திசை பாடியே...! (கொட்டு)

மலையின் உள்ளத்தைப் பாடி வருகின்ருய் ;
　　வலிய பாறையை வாவி விரைகின்ருய் ;
பொலியுந் தெய்வப் பொருளை யுரைக்கின்ருய் ;
　　பொறிக ளோடமின் சார மளிக்கின்ருய் ;
நிலஞ் செழித்திட நின்னை யளிக்கின்ருய் ;
　　நித்தி யக்கடல் சேரநீ செல்வழி,
அலை மனத்தை யடக்கி இறைவனை
　　அறிய நல்லுப தேசமுஞ் செய்கின்ருய் :— (கொட்டு)

கால மிப்படிச் செல்வதைக் காணடா !
　　கடவு ளின்பக் கடலைக் கலந்திடக்
கோல மார்திரு நாமத்தைக் கூவடா !
　　கொடுமை செய்யும் அகந்தையைக் கொல்லடா !
ஞால மாந்திரு நாடகச் சாலையில்,
　　நல்வி னையை நடித்து முடியடா !
காலைக் கட்டித் தலையிற்கை வைத்துநீ
　　கலங்கி டாமல் எழுந்துநில் வீரனே ! (கொட்டு)



தீரங் கொண்டு திறம்பட வாழுவாய் ;
திரு வருளைத் தினந்தினஞ் சிந்திப்பாய் ;
காரங் கொண்டுடை கட்டுகள் யாவையும் ;
காலத் தின்வழி கண்டு நடந்திடு !
போர்செய் வோன்கை பொருந்திய வாளெனப்
புரியுந் தொண்டிற் பலாபல னற்றிரு !
பாரி லேபர மன்பணி செய்யெனப்
பகர்ந்து பாயும் படிகப் படலமே. (கொட்டு)

## உசா. அன்பே கடவுள்

மலருங் காலைத் தென்றலிலே,
　　மரைகள் பூத்து மணம்பரவப்
புலரு மிரவிக் கதிரினிலே,
　　புல்லுண் பசுவின் பாலினிலே,
நிலவுந் திங்கள் வெறியேற்ற
　　நிருத்த மாடும் வேலையிலே,
குலவுங் காத லுளத்தினிலே
　　கொண்டே னன்புப் பரவசமே! க

பாடுங் குயிலின் பாட்டினிலே,
　　பசிய சோலைப் பழத்தினிலே,
ஆடும் மயிலின் தோகையிலே,
　　அழகின் இயற்கை வனப்பினிலே,
வாடும் பயிரை மகிழ்வுறுத்த
　　வானம் வழங்கும் வண்மையிலே,
காடும்வீடு மிருந்து நிதங்
　　கண்ட பயனும் அன்பேதான். உ

கண்ணே, முத்தே, கனிரசமே,
　　காதற் கிளியே யெனக்கொஞ்சிப்
பெண்ணும் சக்தி வளர்க்கின்ற
　　பிள்ளை பேசு மழலையிலும்,
பண்ணர் தொண்டர் பத்தியிலும்,
　　பண்பர் நேயப் பான்மையிலும்,
விண்ணர் விளக்கின் ஒளியினிலும்
　　விண்டே னன்பு விளைசுகமே! ங

கல்லா லடியிற் கனிந்தமொழி,
கண்ணன் குழலி னெழுந்தமொழி,
சொல்லா மோனர் காட்டுமொழி,
சுத்தர் சொன்ன சுருதிமொழி,
எல்லாந் துறந்த புத்தனுடன்
ஏசு நாதர் இயம்புமொழி,
அல்லா ரஸூல் அருளுமொழி
அன்பு மொழியென் றறிந்தேனே! ௪

அன்பே கடவு ளென்றறிவேன்;
அன்பே யவன்பேர் வடிவென்பேன்;
அன்பே கூடும் வழியென்பேன்;
அன்பு மலரால் வழிபடுவேன்;
அன்பிற் பெரிய தொன்றறியேன்;
அனைத்தும் அன்பின் விரிவென்பேன்;
இன்ப முண்மை யறிவாகி
யிருக்கு மன்புப் பரம்பொருளே! ௫

## உஎ. எங்கும் அவன்

உள்ளத்தைக் கொள்ளைகொண்டான்—இந்த
உலகமுந் தானென இலகுவித்தான் ;
தெள்ளொளிக் காலையிலே—புட்கள்
சிவவெனச் சிலம்பிடுஞ் சோலையிலே,
ஒள்ளிய கதிரினிலே—சக்தி
ஓமெனத் தவழ்ந்திடும் அருவியிலே,
வெள்ளி நிலாவினிலே—மலர்
விரிப்பென மீனணி வானத்திலே. க

முல்லையின் முறுவலிலே—அதை
முத்தமிட் டாடிடுந் தென்றலிலே...
செல்புவிப் பாட்டினிலே—பசுஞ்
செழிப்பினிலே, மாந்தர் உழைப்பினிலே,
நல்லது பொல்லதிலே—கால
நடப்பினிலே புதுப் படைப்பினிலே,
சொல்வகை மதங்களிலே—ஹம்ஸஸ்
ஸோஹமென் றுரைத்திடு மறைகளிலே. உ

கலந்துறை கடவுளவன்—உண்மைக்
காதலால் அவனைநாம் கலந்துநின்றால் ;
நலமெல்லாம் நாடிவரும்—தேவர்
நல்லமு தருவியிங் கோடிவரும் ;
பலன்களிற் பற்றுவிடும்—செய்யும்
பணியெலாந் தெய்விக மணங்கமழும் ;
புலன்களாற் காண்பதெல்லாம்—சக்தி
புகுந்துசெய் ஆடலென் றகந்தையறும். ௩

கடற்கரை மணல்வீடு—நிதங்
    கட்டிவிளை யாடுகின்ற குட்டிகளைப்போல்,
உடல்மனை களைக்கட்டி—இங்கே
    உயிர்க்குயி ராயொருவன் ஆடுகின்றான் ;
சடத்தினிற் சித்தவனும்—அவன்
    சக்திவிலாச மிந்தச் சகமனைத்தும்
படமவன் ; பட்டமியற்கை—இந்தப்
    பண்பினை யறிந்தவர் இன்புறுவார். ௬

## உஅ. அறிவொளி

எண்ணமாம் தாரகைகள்—மதி
இரவினில் உனைத்தேடி—உயர்
விண்ணகத் தேதிரிந்தும்—ஞான
விளக்கொளி காணவில்லை. க

கிழக்கிலுன் புன்சிரிப்பைக்—கண்டு
கிளர்ந்ததென் அன்புவெறி
பழக்கிய குயிலினைப்போல்—உன்னைப்
பாடிய தென்மனமே! உ

வெள்ளி மலர்க்காலை—விண்
மீனினம் அத்தனையும்
அள்ளி விழுங்கியதும்—என்னுள்
அறிவு மலர்ந்ததம்மா! ௩

பூட்டுடைத் தென்இதயம்—ஒரு
புதியவிண் கண்டதம்மா!
பாட்டுருக் கொண்டதம்மா—இந்தப்
பாருயிர் முற்றிலுமே. ௪

ஆனந்தக் கடல்விரிவில்—பொன்
அலைகளின் அழகிடையே
மோன நகைக்கதிர்கள்—வீசி
முளைத்ததோர் சுடர்மலையே! ௫


மூர்த்தி

அச்சுடர் மலைமுடியில்—ஏறி
அகிலத்தைப் பார்க்கையிலே
எச்சமயமும் காணேன்—எங்கும்
என்னையே கண்டுவந்தேன். சா

பலபல பெயர்உருக்கள்—ஒரு
பரம்பொருட் போர்வைகளாம்
உலகெலாம் ஆலயமாம்—அதன்
உயிர்த்தொகை சிவனுருவாம். எ

சாமியே உள்மனிதன்—அவன்
சாவினை வென்றவனும்
பூமியே விண்ணுலகம்—உண்மைப்
பொருளினைக் கண்டவர்க்கே. அ

## உக. என் உறவும், பொருளும்

நீலவான் மழையென் பாட்டன்—காற்று
நீளக் கதைகள்சொல்லும் பாட்டி.
ஞாலமாம் இயற்கையென் அம்மா—ஒளிர்
ஞாயி றெனக்கறிவுத் தந்தை.
கோலமதி யெனது மாமா—கடல்
குதித்துப் பாடும்என தத்தை.
ஓலமிட் டுயிர்க்குலம் ஆடும்—இந்த
உலக நாடகமென் வாழ்க்கை. க

பூனை எனக்கினிய தங்கை—கோபப்
புலியும் வலுமுரட்டுத் தம்பி.
யானை எனதுமுத் தண்ணு—மாந்தர்
யாரும் எனதருமைத் தோழர்.
தானை கொண்டுவரும் பகையும்—என்
சகவிளை யாட்டினெதிர்த் தோழன்.
ஞான நூல்களென துள்ளம்—பொது
நன்மை எனக்கினிய சமயம். உ

கல்லும் புல்லு மென்படுக்கை—ஓடுங்
காலம் எனது விசைவண்டி—எல்லை
இல்லா வைய மெனதில்லம்—அதில்
எல்லாப் பொருள்களுமென் கூட்டம்—மறை
சொல்லி வருநதியென் வீணை—கனி
சொரியும் சோலைமடைப் பள்ளி—வான
வில்யான் விண்ணிவரும் பாலம்—விண்
மீன்கள் யாவையுமென் பூண்கள். ங

புள்ளிற் பாடுவதென் இன்பம்—பசும்
புலனிற் செழிப்பதென தின்பம்—பூங்
கள்ளில் இனிப்பதென தின்பம்—தெய்வக்
காதல் வளர்ப்ப தென தின்பம்
துள்ளும் அருவியினி லோடும்—அது
தோகை விரித்து நட மாடும்
உள்ளும் புறமுமென தின்பம்—என்
உறவும் பொருளும் அரு ளின்பம். சு

## ௬௦. யாத்திரை

யாத்திரை செய்வோம்—ஜீவ —யாத்திரை செய்வோம்
யாரென் றறிந்து நம்மை—யாத்திரை செய்வோம். (யா)

அன்பென்னும் கட்டமுதை அருந்திடுவோம்
அறிவென்னும் அருவியில் பருகிடுவோம். (யா)

கம்பென்ன வுறுதியைக் கையிற் பிடிப்போம்;
கவலை கட்டுகளெல்லாம் பின்விடுப்போம். (யா)

முன்வைத்த காலைப்பின் வாங்கமாட்டோம் ;
மூலை யிருட்டினிலே தூங்கமாட்டோம் ;
பொன்வைத்த பெட்டகத்தின் பூட்டையுடைப்போம் ;
பொதுநலத் தாய்கையில் அள்ளிக்கொடுப்போம். (யா)

கள்ள வுறவுகளைத் தள்ளி விரைவோம்
கடவு ளுறவையெண்ணி மனங்கரைவோம்
உள்ளத்தை யவனுக்கே உவந்தளிப்போம்—இந்த
உலகெலாம் ஆனந்த முண்டுகளிப்போம். (யா)



## ௬௧. கோனர் பாட்டு

ஊதும் புல்லாங்குழலைக் கோனரே—இந்த
உலகெல்லாம் பால்பொழியக் கோனரே...!
போது புலர்ந்ததையா கோனரே—பசும்
புல்மணம் வீசுதையா கோனரே! ௧

கட்டவிழ்த்து விட்டுவிட்டான் கோனரே—மாயக்
கண்ணன்வந்து மாடுகளைக் கோனரே!
வெட்ட வெளிப்புலனில் கோனரே—மந்தை
மேய்க்கப் புறப்படுவோம் கோனரே! ௨

தெள்ளமுதஞ் சுரந்திடப் பசுக்களெல்லாம்—நன்ருய்ச்
செழித்துப் பருககப்பசுந் தீனிகொடுப்போம்.
துள்ளியிளங் கன்றுவிளை யாடிவரவே—இன்பச்
சுதந்தரப் பாட்டொலிப்போம் கோனரே! ௩

கள்ளப்புலி நடுங்கக் கோனரே—சுற்றுங்
கண்விழித்துக் கொம்பொலிப்போம் கோனரே!
குள்ளநரி மெல்லவரும் கோனரே—பறை
கொட்டிக் குடல்கலங்க விரட்டிடுவோம். ௪

மாதம் மும்மாரிபெய்யக் கோனரே—பசு
மடிநிதம் பால்கரக்கக் கோனரே
மேதினி கோகுலமாகக் கோனரே—கண்ணன்
வீடுதோறும் விளையாடக் கண்டுகளிப்போம். ௫

பொங்கலுக்குப் பொங்கல்வளம் பொங்கிவளர—வாழ்வு
புதுமை செழித்துச்சுக போகம்வளர
மங்களப்பொற் குழலூதிக் கோனரே—வேணு
மாதவனே டாடிடுவோம் கோனரே! ௬



## ௯௨. காலக் கன்னிகை

கன்னத்திற் கையினை வைத்தொரு கன்னிகை
காலவெள் ளத்தின் கரையினிலே
வன்னப்பொற் சித்திரப் பாவையைப் போலொரு
வார்த்தையும் இன்றித் தனித்திருந்தாள்... க

முக்குணப் போர்கள் அகங்கரித்தே—புயல்
மூண்டு புரண்டுமுன் னேகுதிக்கும்;
பக்கெனக் கொங்கை குலுங்க நகைத்துப்பின்
பார்வையுள் ளாகப் படிந்திருப்பாள். உ

கத்தி யெடுத்துக் குதித்திடும் ஓர்அலை;
கனன்று செங்கனல் கக்குமொன்று
மத்த மதக்கரி போலொரு பேயலை
வாழும் பயிரினை வாரிச்செல்லும். ௩

வெள்ளைப் புயலொன்று வீசுதுபார்—அதன்
வேகத்திரை எமன் வாகனமாம்!
கொள்ளையும், சாவும், கொடுமையும், தீமையும்
கோட்ட மடித்துக் குரைப்பதைப்பார்! ௪

நாட்டுவெறி, பகை தீட்டுவெறி, சண்டை
மூட்டுவெறி, நசை காட்டுவெறி...
ஓட்டுவெறி, பண மூட்டைவெறி—உயிர்
உண்ணும் அரக்கர்போ ராட்டவெறி! ௫

ஊழி யிடிக்குலம் உறுமி வெங்கனல்
ஊற்றி மனிதரை வாட்டுதம்மா !
ஆழித் திரைகள் இரத்தம் பெருகி
ஹரஹரா என்றங் கலறுதம்மா ! ௬

மாந்தர் அகந்தை யிருள்மனக் காட்டினில்
வாழும் விலங்குகள் கட்டறுத்தே…
சாந்தமும் தருமமும் சத்திய முங்கெடச்
சாவுடன் தாவித் திரிவதைப்பார் ! ௭

இந்தப் பயங்கரங் கண்டந்தக் கன்னிகை
எள்ளள வேனும் இரங்காமல்,
அந்தி மலர்போல் அரும்பு நகையுடன்
அமைதி யாகத் தனித்திருந்தாள். ௮

நாடு வருந்திட, ஞாலம் வருந்திட
நல்லவர் கண்டு நலிகின்றார்.
வீடு வருந்தநீ வெண்ணகை செய்யும்
விநோதமிஃ தென்னெனக் கேட்டுநின்றேன். ௯

இன்பம் உதிக்குது பார்கிழக்கே !—என்னுள்
இருள் பிளந்தோர் இரவிவந்தான்,
அன்புக் கதிர்களை வீசிவந்தான் ;—உடன்
அசுர மாயங்கள் அற்றனவே. ௧௦

காலக் கன்னியின் மணவாளன்—அவன்
காக்குங் கடவுளென் றேயறிந்தேன்.
ஞால மெல்லாமவன் லீலையென்போன்—எந்த
நாளும் அவனையே நம்பிடுவோம் ! ௧௧

## ௩௩. காலப் பவனி

நீலத் திரையுடன் வானும்—மெல்ல
நீளக் கதைபேசுங் காலை...
காலத் திரையிற் கதிரோன்—ஒரு
கனகப் படகென் றெழுந்தான்.
கோல மதியுடன் மீன்கள்—ஊர்
கோலம் முடித்து மறைந்த...
ஞால வுயிர்கள் எழுந்தே—வினை
நாடிப் பவனி நடந்த. க

தீச்சுவை போன்ற திருவார்—நல்ல
தீரரு டன்அணி சேர்ந்தே
காய்ச்சின பாலொடு தேனும்—பனங்
கற்கண்டும் போலவர் வாழ்ந்தார்...
பாச்சேறி யின்பங்க ளுண்டார்—பயிர்
பச்சை வனங்களி னூடே
பூச்சேறி வாச வசந்தம்—போலப்
பொங்கிப் பொலிந்து நடந்தார். உ

எட்டுக் கண்ணும் விட்டெரியக்—கதிர்
ஏறிடுங் கோடை யருந்தல்...
கட்டுண்ட பாச வலையில்—விதி
காயும் உருக்குக் கரத்தால்
குட்டிட மிக்க நலிந்தார்—பெருங்
குடும்பச் சுமைகளைத் தாங்கிச்
சுட்டுப் பொசுக்குது வாழ்க்கை—என்று
கூக்குர லிட்டு விரைந்தார். ௩



பச்சை பழுத்துதிர் காலம்—இந்தப்
பாரிரை வாழ்வுக் கனவில்
இச்சைகள் யாவும் இழந்தார்—புல
னின்பத்தை நம்பியே மாந்தார்.
நச்சுங் கடன்சுமை கொண்டார்—மிக
நம்பிய பேரைப் பிரிந்தார் ;
அச்சமும் ஆசைத் துயரும்—பற்றி
‘ஆ’வென் றலறி நடந்தார். ௪

செக்கச் செவேலென மாலை—சாந்தத்
தீயுடன் தென்றலும் வீசச்
சிக்கற்ற சிட்டுக் குருவி—ஆங்கே
ஜிவ்வெனத் தாவிப் பறக்க...
அக்கக்க வென்று கிளிகள்—ஜோடி
யாக மரப்பொந்திற் பேச...
சொக்கும் இயற்கைப் பவனி—வேகச்
சோதி யிழந்திடக் கண்டேன். ௫

மேற்றிசையில் விடை பெற்றே—சுடர்
மெல்லக் குதித்து மறைய...
காற்றலை யேறுங் கடலிற்—பல
காலக் கனவுகள் கண்டேன்...
கூற்றென மெல்ல வுலகை—இருள்
கூடி விழுங்கிய வேளை
தோற்ற வுயிரின மெல்லாம்—சித்தத்
தொட்டிலில் ஆடிடக் கண்டேன். ௬

வானெல்லாங் கார்ப்புயற் கூட்டம்...புவி
மைக்குகை தன்னி லுறக்கம்...
நானெனும் ஆணவங் குன்றி—மிக
நாட்பட்டுப் பிய்ந்த துணிபோல்...
ஊனுடற் பாரந் தளர்ந்தே—கம்பை
ஊன்றித் தள்ளாடி மனிதர்...ஒரு
மோனத் திரைக்குட் புகுந்தார்—ஆ, ஆ!
முடிந்தது காலப் பவனி. ௭

எங்கும் உருத்திர பூமி—உல
கெங்கிலும் ஊழியின் கூத்தே...
மங்கி மறைந்தது காலம்—இனி
வாழ்க்கைக் கிடமில்லை யென்றேன்...
அங்கிளஞ் சேய்களின் கூட்டம்—என்பால்
அன்புடனே வந்து சேர்ந்தார்.
சங்குலை மீண்டுங் கிழித்தே—வரும்
காலப் பவனியைக் கண்டேன். ௮

# ௩௪. கிழவன் கதை



தங்கச் சிலேபோலே—சதை
　　தளதளத் திருந்தேன்—என்
அங்க வடிவினிலே—குமரிகள்
　　ஆசை வைத்திருந்தார்—வளர்

திங்க ளெனப்பெருத்தேன்—போகச்
செல்வங்களும் சுகித்தேன் ;
எங்கும் புலவனென்றே—புகழ்பெற
ஏடுகளைத் துளைத்தேன். க

கண்மணிச் செல்வருண்டு—நாலு
காணியும் பொன்னு முண்டு
பண்மணி என்மனைவி—என்மேற்
பாசமுங் கொண் டிருந்தாள்.
மண்ணுல கின்பத்திலே—தேனில்
வண்டென மூழ்கி விட்டேன்.
கண்கெட் டறுபதிலே—தீராக்
காசமும் வந்ததையா ! உ

பால வயதினிலே—ஓடும்
பாம்பையும் பற்றிடுவேன்—இன்று
கோலைப் பிடித்துத்தொங்கும்—கிழக்
கோலமும் வந்ததையா !
வாலிபப் பிள்ளைகளை—எமன்
வாயிற் பறிகொடுத்தேன்.
தாலிகட் டியவளும்—தீராச்
சண்டை தொடங்கிவிட்டாள். ௩

கோடிக் கவலைகளால்—உடல்
கூனிக் குறுகிவிட்டேன்—நான்
தேடிய செல்வமெல்லாம்—ஒரு
தீர்ப்பினிலே யிழந்தேன்.
காடி குடித்திடவும்—ஒரு
காசும் கிடைப்பதில்லை—அந்த
மோடிக் கிழமனைவி—என்
மூஞ்சியிலே யுமிழ்ந்தாள். ௪

அந்தப் பிடாரியையும்—எமன்
 அள்ளிக்கொண்டு போனன்.
சொந்தமாய்க் கொண்டதெல்லாம்—ஒரு
 சொற்பனமாய்ப் போச்சே!
எந்த மனிதனையும்—உலகின்
 இன்னல் விழுங்கிவிடும்
விந்தையில்லை அரசே—நீயுமிவ்
 வேடமும் போடவரும்!



## ௬௫. யசோதரையும், சித்தார்த்தனும்

சித்தார்த்தன்

வாடி யுதிர்ந்த மலரைக் கண்டும்
வாழ்வை நம்பவோ—கண்ணே,
கோடி யுயிரைச் சாவு நாளும்
கொண்டு போகுதே!

யசோதரை

உதிர்ந்த பூக்கள் உரம தாகும்;
உதிக்கும் புதுமலர்—கண்ணு,
முதிர்ந்த கனிகள் வீழ்ந்து விதைகள்
முளைப்ப தியற்கையே.

சித்தார்த்தன்

எழுந்த பரிதி ஏறி வானில்
இரத்த வெள்ளமாய்—அங்கே
விழுந்து கங்குல் விரவக் கண்டும்
விழியை நம்பவோ—கண்ணே,
விதியை நம்பவோ?

யசோதரை

இரவும் பகலும் சுழலும் பூவின்
இயற்கை யாவதே—கண்ணு,
வரவும் போக்கும் வரவும் உயிர்க்கு
வளமை யாவதே—வாழ்வின்
வழக்க மாவதே.

## கவிக் கனவுகள்

சித்தார்த்தன்

வந்து செல்லும் மின்னல் போன்ற
    வாழ்வை நம்பிடேன்——கண்ணே,
இந்து போலத் தேயும் உலகின்
    இன்பம் வேண்டிலேன்——அதன்
    துன்பம் வேண்டிலேன்.

யசோதரை

இன்ப மென்றால் இன்ப மாகும்;
    இனிய வாழ்க்கையே——சதா
துன்ப மென்றால் துன்ப மாகும்
    தொல்லு லகமே.
கொஞ்சுங் கிளிகள், குதிக்கும் மயில்கள்,
    கூவுங் குயிலினம்,
கஞ்ச மலரில் ஒதுங்கும் அன்னம்
    களிப்பதைக் காணீர்——ஆற்றின்
    கானத்தைக் கேளீர்!

சித்தார்த்தன்

பாட்ட டங்கிப் புட்க ளெல்லாம்
    படுத்து றங்கிடும்——ஆற்றின்
ஓட்டம் வாழ்வின் ஓட்டந் தன்னை
    ஓங்கிப் பாடுதே——உள்ளம்
    உண்மை தேடுதே...!

## கவிக் கனவுகள்

யசோதரை

தென்ற லும் நிலாவும் இந்தத்
தேன் பொழிலிலே--கண்ணு,
மன்றல் புரிந்து மகிழு மியற்கை
வளமை காணுமே.

சித்தார்த்தன்

காற்றின் ஓட்டம், ஆற்றி னேட்டம்
கலந்தென் காதிலே--கண்ணே,
நேற்றி ருந்த தில்லை இன்று...
நிசமி தென்னுமே.

யசோதரை

அக்கக் காவென் றே கிளிகள்
அழைப்பதைக் கேளீர்!

சித்தார்த்தன்

துக்கம் வந்தென் உள்ளந் தன்னைத்
துளைப்பதைக் காணய்—உண்மை
அழைப்பதைக் கேளாய்!

## ௩௬. நடனம்

கத்து திரைக்கடலில்—நீலநிறக்
காளிபுரி நடனம்
தத்து மலையருவி—தடாரெனத்
தாவிப்புரி நடனம்
தத்தைகள் பேசிடவே—குயில்கள்
சந்தத் தமிழ்பாட
ஒத்து வண்டூதிடவே—மயிலினம்
ஓங்குமொயில் நடனம்! ௧

கோதவிழ் பொன்மலர்கள்—தென்றலுடன்
கொஞ்சிப்புரி நடனம்
காதலர் வெண்ணிலவில்—களிகொளும்
கானத்திரு நடனம்
ஆதரவோ டடியார்—மகிழும்
அன்புத்திரு நடனம்
நாத வெளியினிலே—பராசக்தி
நர்த்தன மாமிவையே! ௨

## ௯௭. பூகம்பம்

என்ன பயங்கர லீலை—அம்மா
என்ன பயங்கர லீலை!
கன்னங் கறேலென் றிருட்டு—நெடுங்
கம்பி மின்னல்கள் கதங்கொண்டு வெட்டப்
பின்னும் மதக்கரிக் கூட்டம்—போலப்
பேரிடி வானத்தில் மேகத்தின் ஓட்டம்;
தின்னும் புலிக்குகை தானோ—இன்று
திக்குத் திசைகள் திடுக்கிடல் ஏனோ? (என்ன)

கட்டக் கடகட வென்றே—இடி
கர்ச்சித்துத் தந்தி யடித்தது சென்றே,
தட்டத் தடதட வென்றே—மழைத்
தாளம் அடித்துப் பொழிந்தது கொண்டல்!
மட்ட மடமட வென்றே—நீள்
மரங்கள் மனைகள் சரிந்தன ஒன்றாய்,
பட்டப் படபட வென்றே—யிந்தப்
பாருயிர் நெஞ்சம் பதைத்தழு மந்தோ! (என்ன)

வெறிகொள் எரிமலை போலே—எமன்
வேட்டைப் படையின் விசையினைப் போலே,
பொறிபுலன் புந்தி நடுங்கக்—கோடிப்
போரில் வெடித்த புகைக்குலஞ் சூழ,
நெறிக ளெல்லாந் தடுமாறி—மாந்தர்
நிற்க நிலையற்றுத் தக்குத்தக் கென்றே,
அறிவிழந் தெங்குமே வீழ—ஐயோ
அண்டமோர் தொட்டிலென் றாடிய தென்னே! (என்ன)

நோயெனச் செல்வங் குவித்தே,—ஏழை
நொண்டி முடங்கள் "ஒருபிடி" யென்ருல்
நாயினைச் சூவிடுஞ் செல்வர்—ஒரு
நாளைக்கு நூறுபொய் கட்டும் வழக்கர்
தேயத் துரோகங்கள் செய்தே—நன்கு
தின்று கொழுத்ததி காரஞ்செய் வண்டர்
பேய்மதக் காம வெறியில்—குலப்
பெண்களின் கற்பைக் கெடுக்கும் வெறியர்

ஞாலத்தை யாளுவோம் என்றே--பிறர்
நாட்டை நடுக்கி நசுக்கும் செருக்கர்
மாலொத்த கம்பீர வீரர்--மாதர்
மையல் மடியேவை குண்டமென் ருழ்வார்,
சீலத் திருநெறி யாளர்—மதச்
சிக்கில் அகப்பட்டுப் பக்குவங் காணர்,
காலச் சினக் கடைவாயில்—சற்று
கண்ணைச் சிமிட்டுமுன் காணுமற் போனர்! (என்ன)

அழிக்கும் அரக்கரை மொத்தி—அந்தோ
அகந்தை நிணத்தைப் பிதுக்கிக் குவிப்பாய்;
பழிக்குப் பழிவாங்கு கின்ருய்—அம்மா
பாவ மறியாப் பலரையேன் கொன்ருய்?
செழித்து வளரும் உலகைத்—தாயே
தீப்போலச் சீறிப் புடைத்து வருத்தி
அழித்தல் உனக்கழ காமோ?—அம்மா
யாரறி வாருன் அதிசய லீலை? (என்ன)

தாய்முலை யுண்ணுங் குழந்தை—ஆசைத்
தாரத்தை வாரித் தழுவிய காளை
தேயத்தைக் காத்திடுந் தொண்டர்—தொழில்
செய்து பிழைக்கும் எளியர், வறியர்
போய துயிரென் றலறி—நொடிப்
போதினிற் சத்தம் அடங்கிப் புதைந்தார்.
ஏயவர் சிற்றுயிர் தாங்கி—ஐயோ
இன்னற் படுவதை என்னென் றுரைப்பேன்! என்ன)

உண்ண வுடுக்க வொன்றில்லை—ஆங்கே
உட்காரக் கூட வுறைவிடம் இல்லை
தண்ணீருந் தாகத்திற் கில்லை—தம்மைத்
தாங்கும் உறவினர் நீங்கிய தொல்லை
புண்ணில் எரியெனப் பாயச்—சீறிப்
பொங்கும் அனலிற் புழுவெனப் பட்டார்
எண்ணு முன்னே ஒரு பேரூர் முற்றும்
இப்படிப் பாழ்சுடு காடான தென்னே! (என்ன)

சின்னக் குழந்தையின் கண்ணீர்—ஏழை
திக்கற் றழும்பரி தாபச்செங் கண்ணீர்,
இன்னிள மென்முலை மார்பில்—மாதர்
இன்னல்கள் விம்மி யடித்தழுங் கண்ணீர்,
வன்மை யில்லாத கிழவர்—தங்கள்
மைந்தரைச் சாகக் கொடுத்தழுங் கண்ணீர்
குன்றின் அருவியைப் போலே—ஐயா
கொட்டுது கொட்டுது கோவெனக் கூவி! (என்ன)

சாவின் முரசம் அதிர—காளி
ஸம்ஹாரப் பாட்டைத் தணல்பெறப் பாட,
ஆவென் றலறிடும் வெள்ளம்—ஊரை
அள்ளி விழுங்கி யடிக்குது கொள்ளை!

பூவினிற் காணும் பொருள்கள்--எல்லாம்
புதைகுழி மூடும் புழுதியாமென்றே
தாவிப் பிணக்குவை மீதே—ஊழி
தந்திமித் தோமெனத் தாண்டவம் ஆடும் (என்ன)

வையக வாழ்விந்த வாறே—இங்கு
மன்னனும் ஆண்டியும் மண்ணின் விலையே!
பையினிற் காற்றுள்ள மட்டும்—நல்ல
பக்தி வைராக்கியச் சித்தங்கொண் டன்பாய்
செய்யத் தகும்பணி செய்வீர்—ஒரு
தெய்வ பராசக்தி யுண்டென்று நம்பி
பொய்யகம் போட்டி பொறாமை—யின்றிப்
பூதலக் கோயிலில் தீதற வாழ்வோம்! (என்ன)

பின்னர்,

உருவிய வாட்படைக் கஞ்சோம்!—சூழும்
ஊழி நெருப்பையும் ஊதி யெறிவோம்!
கருங்கடல் விம்மிக் குமுறும்—புயற்
காற்றையுந் தென்றற் கடுமையென் றேற்போம்!
வருந்திச் செல் காலவெள்ளத்தில்—சற்றும்
மனங் கலங்காத மலையென் றிருப்போம்!
உருத்திர லீலைக்கும் அஞ்சோம்!—அஞ்சோம்!!
உலக மயக்கின் உதட்டையுங் கொஞ்சோம்! (என்ன)

சத்தியங் கொண்டு நடப்போர்—வருஞ்
சாவையுங் காலால் உதைத்திட வல்லார்
மெத்த வுறுதிகொள் வீரர்—இந்த
மேதினி மோகினி மெத்தென வைக்கும்
முத்தத்திற் சித்தங் கலங்கார்—வாழ்வின்
முள்ளிற்கும் அஞ்சார் விழித்திருப் பாரெனச்
சக்தி பயங்கர லீலை—செய்து
சாற்றினள் காட்டினள் மாற்றினள் மாயம்! (என்ன)

## ௬அ. பகைவர் வாழ்த்து

பகைவர் பகைவரென்னும் அண்ணமாரே—உம்மைப்
பலமுறை வாழ்த்து கின்றேன்—அண்ணமாரே...
இகலும் இனியநட்பும் இந்த வுலகில்
இரவும் பகலும் போலாம்—அண்ணமாரே...
புகழும் வசையும் சமமென்று புகல்வோர்
புன்னகை புரிகுவார் இன்னலைக் கண்டே...
சிகையெழும் விளக்கினைச் சீறுமோ விட்டில்!
செஞ்சுடரை மலைப் பாம்புந் தின்றுவிடுமோ? ௧

ஆந்தைக்குக் கோபம் வந்தால் அண்ணமாரே—பகல்
அஞ்சி யொளிவ துண்டோ அண்ணமாரே...
ஓந்தி முகஞ்சுளித்தால் அண்ணமாரே—விண்
ஒளிக்குக் கெடுத லுண்டோ அண்ணமாரே...
பாந்தள் படமெடுத்தால்—அண்ணமாரே—வானப்
பருந்து பயப்படுமோ அண்ணமாரே...
வேந்தர் முனிந்துவரின் அண்ணமாரே—தவ
விரதர் கலங்குவரோ அண்ணமாரே...! ௨

கதிரவ னென்னுமந்தப் பந்தையுருட்டி—நீண்ட
காலம்விளை யாடுகின்ற கோல வுலகில்
எதிரெதிர்க் கட்சியின்றி ஆட்டமு முண்டோ?
இருகரை யின்றிநதி யோட்டமு முண்டோ?
அதிர் வெடி வீசிடினும் அண்ணமாரே...
ஆத்தும சித்தர்மனம் அழிவதுண்டோ?
விதைமுளைத் தேமலர்ந்து முதிர்ந் துதிரும்
விதமிவ் வுடலியல்பாம் அண்ணமாரே...! ௩

காற்றடித்தால் வெள்ளிமலை கலங்கி டுமோ ?
கதிருண் டாற் கடல்வெள்ளம் குறைந்திடுமோ ?
போற்றுவதுந் தூற்று வதும்—அண்ணமாரே
பொய்யுலக வழக்கந்தான்—அண்ணமாரே...
ஆற்ற லுள்ள நல்லறிஞர்--அண்ணமாரே
அணுவுங் கலக்கமுறார்—அண்ணமாரே...
கூற்றையுதை சேவடியைக் கும்பிடுமன்பர்—தம்மைக்
கும்பிட்டு விலகிடுங் கோரவினையே... ௪

நூறுதலைப் பகையின்றிப் பாரதமுண்டோ ?
நொண்டிசனி இன்றிநளன் காதையுமுண்டோ ?
கூறுசெய்யத் தசமுகக் கொடிய ரின்றிக்
கோதண்ட ராமனிசை கூறுவதுண்டோ ?
மாறுசெய்யும் கம்ஸனின்றி மாதவனுண்டோ ?
மாரனின்றி நெற்றிவிழி மாண்பறிவமோ ?
வேறுபட்ட சூரபத்மன் வீண்செருக் கின்றி...
வீரவடி வேலனுக்கு வேலையுமுண்டோ...? ௫



## ௯௧. வீழ்ந்த கொம்பு

நேற்றுன் பூத்த பசுமுகப் புன்னகை
நீள மாந்தினள் என்கவிக் காதலி.
தோற்ற மான வுலகம் பராசக்தி
சொரூப மென்னவுன் சூழலிற் காட்டினை
வீற்றி ருந்துன் னமுத நிழலிலே
விண்ணின் பத்தின் விளக்கமி தாமென்பேன்.
காற்று னக்கொரு கூற்றென வந்ததே
கனி குலுங்கிக் கவின்பெறுங் கொம்பரே! க

மஞ்சள் குங்கும மிட்டு மனையொளிர்
மங்கலத் திரு நாத னிழந்ததும்,
'வஞ்சமோ தெய்வ மே' என்று வீரிட்டு
மண்ணில் வீழ்ந்து மழுங்குங் கொடுமைபோல்,
கொஞ்சுங் கிள்ளை, குயிலினங் காதலிற்
கூடிப் பாடிக் குலாவி மகிழ்ந்திட
வஞ்ச மற்று வளர்ந்தபைங் கொம்பரே!
வாயு வுன்னை வதைத்ததென் வஞ்சமே! உ

மாசி வந்தது ; மாமரம் பூத்தது ;
மண மணக்குது தென்றலின் முத்தமே ;
ஆசி கூறின புள்ளினம் ; சித்திரை
அரத னக்கனி காணுவம் என்றெல்லாம்
ஆசை கண்ட கனவுகள் யாவையும்
அடியு டன்படக் கென்று முறிந்திட
மோச மாகவுன் ஆயுளை முய்த்ததே
மூர்க்கக் காற்று முருகிளங் கொம்பரே! ௩

வான ளாவி வளர்ந்து மலர்ந்துதிர்
வாழ்வெ னும்பெரு மாமரந் தன்னிலே,
மானி டம்ஒரு மாபெருங் கொம்பதில்,
வாடி நாளும் உதிர்வன பச்சிலை ;
தேன் மலர்களாய்ச் சிற்சில மண்ணுகும் ;
திரண்ட நற்கனி யாவன சிற்சில ;
ஏனி தென்றிடிற் சொல்லிட வாயில்லோம் ;
எல்லாங் *காத்தவ ராயரின் கூத்துக்காண் ! ௪

காகத்தின் உபதேசம்

என்று நானெண்ணி யேங்கி யிருக்கையில்,
“ எழுந் திருமணி தா,துயர் ஏனினி ?
‘ இன்றி ருந்தவர் நாளையில் லையெ ’ ன்ருய்
இறந்தவர் பிறக் கும்வினை யெண்ணிலாய் ;
ஒன்று போயிடின் மற்ருென்று தோன்றிடும் ;
ஒடிந்த கொம்பிங்கு மீண்டுந் தளிர்த்திடும் ;
கன்றுந் தாயும்போல் வாழும் உலகியல்
கலக்கம்ஏ” னெனக் காகம் கரைந்ததால். ௫

புத்த னுக்கும் அரியதோர் புத்தியைப்
புகட்டிற் றிக்கரும் புள்ளென் றுவந்தனன்
சத்தியம் இது ; சங்கடம் ஏனினி ?
சகத்தின் வாழ்விற் கிருவகை வாயிலாம் ;
செத்த பாட்டியோர் சேயென மீளுவாள்
செடிமண் ணுகிச் செடியை வளர்த்திடும் ;
மெத்தக் கீழ்க்கன்று மேவிடும் வாழைக்கே ;
விய னுலகோர் விசித்திர நாடகம். ௬

---

* முக்யப் பிராணன்.

ஓட வோடப்பின் ஊற்றுப் பெருகிடும் ;
உதிர்ந் துதிர்ந்து மலர்ந்திடும் வாழ்க்கையே ;
வாட வாட வளரும் இலைகளே ;
மாநிலம் ஒரு போக்கு வரவுகாண் ;
வேடக் காலனும், †வேத முதல்வனும்
விரும்பிப் பாத்திரம் சோடித்து வேகமாய்
ஆடச் செய்திடு நாடகம் வாழ்வென்றே
அறிந்த வர்துய ரற்றுள் ளமர்வரே.

† பிரம்மா.

## ௪௦. ஏசுநாதர் முறையீடு

பரம பிதாவே, பரம பிதாவே!
பார்படும் பாட்டினை யாருக்குச் சொல்வேன்!
நரபலி நரபலி நரபலி யெங்கும்!
நாகரி கப்பெயர் நாவினி லேதான்.
அரசுகள் உதிர்ந்தன ஆடியிற் புளிபோல்;
அரக்கரின் வாட்படை அறத்தினை யழிக்கும்.
முரசுகள் போர்வெறி முழக்கிவிண் ணேறும்;
மூலைக்கு மூலை பிணக்குவை சேரும். (பரம)

வேதத்தைப் படிப்பது வீணென வெறுத்தார்.
வெடிகுண்டு வீச்சினிற் குடிகொண்டு களித்தார்.
நீதியைப் பஞ்சமா பாதகர் நலித்தார்.
நிலத்திமிர் மதத்திமிர் நிறத்திமிர் கொண்டார்.
சாதிகள் ஆயிரம் சாமிகள் கோடி
சண்டையிட் டழிகின்றார் சத்தியங் காணார்!

போதனை செய்தது புழுதிமண் ணாச்சே,
பொய்நசைப் போர்களின் காடுல காச்சே! (பரம)

எட்டெட்டுத் திக்கிலும் இரணியர் வலுத்தார்;
ஏழைகள் வருந்தினர் எமன் கையில் உயிர்போல்.
கட்டுண்ட பாரத தேவியின் கண்ணீர்க்
கடலினைக் கண்டுவெங் கவலையிற் குளித்தேன்.
கொட்டுது கொட்டுது கொட்டுது குருதி;
குண்டுகள் எறிந்தனர் விண்டலத் திருந்தே
வெட்டுண்ட மறியென விழுந்தனன் முன்னே
வேதனை தீர்த்தருள் சோதியின் முதல்வா! (பரம)

கருணையும் பொறுமையும் பழங்கதை யென்பார்
கடவுளும் சமயமுங் கள்மயக் கென்பார் ;
தருமத்தின் வீரர்க்குத் தடியடி யீவார் ;
தானெனும் ஆணவம் தலைகொண்டு போவார் ;
கரும்புகை கவர்ந்தது காற்றுடன் கதிரை ;
கதியற்றுப் பதியற்றுக் கலங்கினர் எளியோர் ;
இரும்புக்கை கொண்டிடர் இழைத்தனன் சாத்தான்
இரக்கம்வைத் துலகினைக் காத்தருள் இறைவா ! (பரம)

௪௧. நீ

சின்னஞ் சிறுவயதி லென்னை—நீ
சீராட்டித் தாலாட்டி வளர்த்தாய்.
அன்னையாய் நின்றமுத மளித்தாய்—நீ
அன்புக் கதைகள் பலசொன்னாய்
கன்னிக் கலைமகளாய் வந்தாய்—என்
காதல் முழுதுங்கொள்ளை கொண்டாய்.
வன்னக் கவிமலர்க ளீந்தாய்—என்
வாழ்க்கை முழுதுமுனக் கீந்தேன். ௧

காலைப் பரிதிமுக முனதே—அதைக்
கண்டுமெய்ம் மறந்து நிற்பேன்...
மாலை முல்லைநகை யுனதே—அதை
மருவுங் காற்றுனது பாட்டே...
சோலைக் கிளியுனது பேச்சே—இரசஞ்
சொட்டுங் கனியுனது கனிவே...
வேலைத் திரையுனது முரசே—மலை
வீழும் அருவி பொதுமறையே! ௨

வானம் வளைந்தநில மெல்லாம்—நீ
வாழும் பெரியதிருக் கோயில்.
ஞானம் விழித்த மன மெல்லாம்—நீ
நாளு மிருக்குமலர்த் தவிசே...
மோனம் விழித்தநிசி யெல்லாம்—உன்னை
முன்னே காணுஞ் சுடவேளை...
யானும் எனதுடைமை யாவும்—உன்
அருளின் பொதுவுடைமை யாமே... ௩

## சஉ. ஈவாய்

சாந்த மனவுறுதி யீவாய்—குண்டும்
சாடா வுடலுறுதி தருவாய்
வேந்தர்க் கரிய நிதிதருவாய்—ஆத்ம
வீரக் கனல்வளமை தருவாய்
மாந்தர் படுந்துயரைத் தீர்க்க—உண்மை
மருந்தை விரும்பிமிகத் தருவாய்
காந்தம் போலெனது நெஞ்சை—நிதம்
கவர்ந்துன் அருட்பொலிவு காட்டாய்! க

பஞ்சம் ஒழியவழி காட்டாய்—கொடும்
பாபம் ஒழியவழி காட்டாய்
வஞ்சம் ஒழியவழி காட்டாய்—மாந்தர்
வறுமை ஒழியவழி காட்டாய்
அஞ்சா தறஞ்செய் திறனருளாய்—நாளும்
அயரா முயற்சியெனக் கருளாய்
தஞ்சம் புகுந்து வரங்கேட்டேன்—தந்தை
தாயுங் குருவுமெனக் காவாய். உ

மரண பயம்விலக வேண்டும்—பொல்லா
மாற்ருர் திருந்திவர வேண்டும்.
கருணை விழிதிறக்க வேண்டும்—எங்குங்
கண்டுன் அன்புசெய்ய வேண்டும்.
தருண மழையமுதம் போலே—உன்
சக்தி மழைபொழிய வேண்டும்
அருண சௌந்தரியம் வேண்டும்—நல்
லடியார் உறவுமிக வேண்டும். ௩

## சரு. நவமணி

மின்னுங் குணமணிகள்—மனிதா,
மேன்மையுறத் தேர்ந்தே
பொன்னுன வாழ்க்கையிலே—மனிதா,
பொலிந்திடப் பதிப்பாய். க

யாருக்கும் அஞ்சாமல்—மனிதா,
அறங்களைப் புரியும்
வீரக்கனல் வயிரம்—மனிதா,
விளங்குக முடிமேல்! உ

மாணிசை மார்பினிலே—மனிதா,
மாசற்ற மெய்யன்பாம்
ஆணிமுத் தாரத்தினை—மனிதா,
அருளிற் கோத்தணிவாய்... ந

நீங்கறும் பத்தியினுல்—இறைவனை
நேயமுறக் கலக்கும்
ஓங்கிய காதலென்னும்—பவளத்தை
உள்ளத்தி லேயணிவாய்... ச

காணக் காணக்களிப்பாம்—இயற்கையிற்
காணுந் திருவழகாம்
மாணிக்க மாலையினை—அணிவாய்,
மாணிக்க வாசகம்போல். ரு

உரமுள்ள தோளில்—மனிதா,
ஒப்புர வின்பமென்னும்
மரகத வலயம்—அணிவாய்
மாநிலம் போற்றிடவே... சு

தீமைகளை விலக்கும்—விரதத்
திண்மையி லேவிளைந்த
கோமேத கத்தினையே—மனிதா,
கோமுடி யாயணிவாய்... ௭

தைரிய லட்சுமியின்—அருளைத்
தந்து நலம்புரியும்
வைடூரி யத்தினையே—மனிதா,
மலர்க்கர மணிவாய். ௮

நால்வகைப் பொருளை—நிறைவாய்
நல்கிடுங் கல்வியென்னும்
நீல மணித்திரளை—மனிதா,
நெற்றியி லேயணிவாய்... ௯

அருங்கலைத் தொழில்கள்—பெருகும்
ஆற்ற லளிக்கின்ற
புருட ராகத்தினை—மனிதா
பூஷண மாயணிவாய்... ௧௰

## ௪௪. குகை

செங்கன லென்னச் சிரித்துப் பகலவன்
 மேற்றிசை சென்றதுவும்,
கங்குலின் மீன்மலர்க் கூந்த லவிழ்ந்தது ;
 காட்சிப் பசுமையெல்லாம்
மங்கி மறைந்தன ; வானம் வளைத்ததோர்
 மாயக் குகையினிலே
எங்கு மலையாமல் இங்கென துள்ளம்
 இருந்தபடி யிருந்தேன். ௧

காணும் உலகமோர் இந்திர ஜாலம்போற்
 காணமற் போச்சுதம்மா !
நாணும் புதுநாட்டுப் பெண்போலென் ஆணவம்
 நாணிக் குனிந்ததம்மா !
வேணும் வேணுமின்னும் என்றென்னைத் தின்றிடும்
 வேட்கை தணிந்ததம்மா...
நானுமென் ஆருயிர் நாதனும் ஒன்றிய
 மோனக் குகையினிலே... ௨

## ௪௫. கவியும், காலனும்

கனவினில் உதிர்ந்த—நல்ல
கவிமலர் மாலை ;
வனமலர் களைப்போல்—இது
வாடுவதில்லை யென்றும். ௧

மானிட வாழ்வினின்றே—தொடுத்த
மணமலர் மாலை ;
தேனிறை நாண்மலர்போல்—நிறந்
திரிந்து போவதில்லை. ௨

கவிமலர் மாலை—சூடக்
காதலனைத் தேடிப்
புவியெல்லாந் திரிந்தேன்—எவரும்
பொருட் படுத்தவில்லை. ௩

ஓசைமலர் மாலை—தூய
உள்ளத்தி லேபூத்த
ஆசை மணமாலை—இதை
அணிய வாருமென்றேன். ௪

புகழெனுஞ் சிறுக்கி—வந்து
பொக்கென நகைத்தாள் ;
இகழ்ந்தென்னை வெறுத்தார்—அவள்
இனத்தின ரெல்லாம் ௫

சுவைகளை மதிப்பார்—மாதர்
தோள்களை மதிப்பார்
கவிகளை மதிப்பார்—இல்லை
காணுல கெங்கிலுமே... ௬



கண்ணீருடன் கலக்கி—இந்தக்
கவலை மாலையினை
மண்ணி லெறிந்துவிட்டேன்—என்
மன்னனும் வந்துவிட்டான். ௭

காலன்

கலங்கி நில்லாதே—இதோ
காதலன் வந்துவிட்டேன்—கவி
அலங்கலை யணிவேன்—உனக்கும்
அமர வாழ்வளிப்பேன். ௮

அள்ளிக் கலந்துசெல்வேன்—உன்னை
ஆசைக் கவிப்பெண்ணே—உடனே
துள்ளி வந்துலகம்—உன்னைத்
தோத்திரம் செய்வதைப்பார்! ௯

காதல னோடுசென்றேன்—கண்
காணாத விண்ணகமே
மேதினியைக் கண்டேன்—அடாடா
விந்தை யென்ன சொல்வேன்! ௧௰

ஆவி போனவுடல்—அதை
அலங்க ரிக்கின்றார்.
ஓவியந் தீட்டுகின்றார்—கண்ணீர்
ஓடப் புகழுகின்றார். ௧௧

பாட்டுப் பாடுகின்றார்—படத்துடன்
பவனி செல்லுகின்றார்
கூட்டங் கூடுகின்றார்—என்னவோ
கும்மாளம் போடுகின்றார்......! ௧௨

## சசூ. உதயராகம்

ஓம்தத்ஸத் ஓம்தத்ஸத் ஓம்தத்ஸத் என்றே
உதய ராகம் உதித்தது வானில்...
பாமரர் பண்டிதர் யாவரும் விழித்தார்.
பாரால யத்தினில் ஓர்குல மானுர்...
தேமலர் சூடித் திகழ்ந்தது காலை...
திவ்விய கீதங்கள் திசைதிசை பரவ...
சேமவொளி வீசித் தினகர னெழுந்தான்...
தேவ சமுதாய தீரரைக் கண்டோம்... க

சத்திய விரதத்தைச் சந்ததம் காப்போம்
சாதிமத பேதச் சண்டை யொழிப்போம்...
சித்தமுஞ் செய்கையும் ஒன்றெனக் காண்போம்
தேசம் விளங்கத் திருப்பணி செய்வோம்...
எத்திசை யுலகிற்கும் இன்பமே புரிவோம்
எண்ணத்தை உயர்த்துவோம் ஈசனை நோக்கி...
புத்தப் புதுயுகந் தோற்றுவோ மிங்கே...
பூமியில் விண்ணகம் பொலிந்திடக் காண்போம். உ

## சஎ. இரக்ஷகன்

எனது ரக்ஷகன் வரும்
இனிய ஜோதி நாளிதே;
மனதவன் திருப் புகழை
மங்கள மாய்ப் பாடுக! க

மையிருள் வனத்தில் யான்
வழி நடக்கும் போதிலே
கைகொடுத் தெனை நடத்தக்
காலை போல்வரு குவான். உ

துன்பமேகம் வந்தென் வாழ்வைச்
சூழ்ந்து நின்ற போதிலே,
'இன்பம் யான்உன் உள்ளத்தில்
இருக்கிறே' னென் றுடுவான். ங.

கோடை வெய்யிற் சோடை போக்கக்
கொண்ட லாக வீசுவான்;
வாடும் ஆவி சோர்வு நீங்க
வான் மழை பொழிகுவான். ச

துட்டப் பேய்கள் சூழ்ச்சி செய்து
தூக்கி லிட்ட போதிலும்,
கட் டெரித்து நித்தியக்
கனலென் றென்னை மாற்றுவான்; ரு

பவவினை யெனைத் தொடர்ந்து
பங்கஞ் செய்த போதிலும்,
கவிதை யாக வந்து தெய்வக்
காதலால் உருக்குவான். சா



## சஅ. இந்திர கானம்

பொலிக பொலிக பொலிக பொலிகவே
பொங்கு மின்பம் எங்கும் பொலிகவே...
நலின நரக விருளும் அச்சமும்
நமுசி யாதி யரக்கர் ஒழிகவே;
பொழிக பொழிக பூரணக் கதிர்—சுத்த
போக யோக சத்தி வளர்கவே
அழிக வுலகில் அசுர மாயமே...
அமர கங்கை யருவி பெருகவே. க

வருக ருத்ரன், அக்கினி, சூரியன்,
வருக மித்ரன், வாயு, சோமனே,
வருக விஷ்ணு, வருணன், அர்யமான்,
வருக அதிதி—தேவர் அன்னையே...
முருகன் வருக! முனிவர் வருகவே!—வேத
முரசுகொட்டிச் சுரர்முன் செல்கவே!
நிருதர் நீறுபட்ட ழியவே!—பூவில்
நீடு தெய்வ வாழ்க்கை யோங்கவே... உ

இரு ளொழிக்கும் இரவி யெழுகவே!
இட ரொழிக்கும் உறுதி பெறுகவே!
அருள் சுரக்குஞ் சுரபி வாழ்கவே—எங்கும்
ஆத்ம ஞானம் பூத்தொ ளிர்கவே...
பொருள்செழித்து வாழ்க பூமகள்...மிகப்
பொன்செழித்து வாழ்க நன்மனை—தெய்வத்
திருச்செழித்து வாழ்க தீரரே—வாரீர்
செயமுரசு கொட்டி முன்செல்வோம்... ங

இன்பமின்ப மென்று பாடுவோம்—எங்கும்
இன்ப மோங்கத் தொண்டு செய்குவோம்
அன்பெனும் அமுத முண்ணுவோம் !
அமரவூற்றை யள்ளிப் பருகுவோம்...
துன்ப மில்லை அச்ச மில்லையே !
சோம்ப லில்லை தோல்வி யில்லையே !
தென்புலத் தரசன் பாசமும்—நம்மைத்
தீண்டாத் தீயைத் தூண்டினேம். ௪

காதல்காத லென்று பாடுவோம்—ஆண்பெண்
காதலைநல் யோக மாக்குவோம்...
காதலேறும் வாழ்க்கை சக்தியாய்—உண்மைக்
காத லற்ற வாழ்க்கை சக்கையாம்...
பாதகப் பகைவர் நெஞ்சிலும்—விஷப்
பாம்பி னுள்ளுங் காத லுள்ளதே...
காதலின் கதையிவ் வாழ்வெல்லாம்—தெய்வக்
காதல் வாழி யென்று பாடுவோம்... ௫

கண்ணிற் காணும் இல்லறத்திலே—தெய்வக்
கற்பகக் கனிகள் காணுவோம்...
பெண்ணிற் காணும் அன்புளத்திலே
பேரின்பக் கலை விளக்குவோம்
மண்ணியல்பை மாற்றி யாளுவோம்...
வறுமை மடமை மாசை நீக்குவோம்...
விண்விளக்கை வீட்டி லேற்றுவோம்—உண்மை
வேத வாழ்வைச் சாதனஞ் செய்வோம்... ௬

தேவர்

வேந்தனுக்கு வெற்றி கூறுவோம்—ஞான
வேள்வித்தீ விண்ணெட்டத் தூண்டுவோம்...
சாந்தமாக மாந்தர் வாழவே—இங்கே
சத்திய யுகங் கொணருவோம்...
சோர்ந்து வீழ்க தொல்லை செய்பகை...
சுதந்தரக் கொடியை நாட்டுவோம்...
சேர்ந்து பாரோ டமுத முண்ணுவோம்—இங்கே
தேவஜாதி யுண்டு பண்ணுவோம்... எ

வெற்றிவெற்றி யென்று கூறுவோம்—ஆன்ம
வீறு பெற்ற தீரராகுவோம்!
ஒற்றுமைகொண் டேமுன் னேறுவோம்...தூய
வுண்மை கொண்டு தீதையோட்டுவோம்...
வெற்றுரை விட்டன்பு செய்குவோம்...
விண்ணகத்தை மண்ணிற் காணுவோம்...
சுற்றுஞ் சச்சிதா னந்தக்கதிர்—வீசச்
சோதி சக்திச் சுடரைத் தூண்டுவோம்... அ

ஓம் சுத்த சக்தி.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1532
நன்கொடை எண்: 1532



...ர் காமராசர் பல்கலைக்க...
அவ்வை...